பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 19 வெள்ளிக்கிழமை 04.12.2020 கதிர் 29

### இனி இது ரகசியம் அல்ல!

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின் வீடியோக் காட்சியைப் பார்த்த யாழ் மாவட்டத் தமிழன் எவனும் தனது சட்டைக் கொலரை திருப்தியுடன் தூக்கி விட்டுக் கொள்ளமுடியும்.

கடந்த பொதுத் தேர்தலில் தாங்கள் தேர்ந்தெடுத்து பக்கம்02 »

# பிரபா ஒருவரைக் கொல்வதற்காக பல்லாயிரம் பேரைக் கொன்றீர்கள்!

## அதுதான் யுத்தக் குற்றம்; அதுதான் இனவழிப்பு நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் கோபாவேசம்

கொழும்பு, டிசெம்பர் 04

பிரபாகரன் தப்பித்து விடுவார் என்ற காரணத்திற்காக தமிழ் மக்களை வெளியேற்ற இடமளிக்க முடியாது என மஹிந்த ராஜபக்ஷ கூறியமையும், ஒரு நபரை - பிரபாகரனை - கொலைசெய்ய வேண்டும் என்பதற்காக பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களை கொன்றமையுமே நாம் கூறும் போர்க் குற்றமாகும். அதுதான் இனவழிப்பு நடவடிக்கை.

- இப்படி நாடாளுமன்றத்தில் கோபாவேசத்தோடு கூறினார் தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். 11 »



# வட மாகாணத்தில் புயலால் 53 ஆயிரம் பேர் பாதிப்பு!

## 2,370 வீடுகள் சேதம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர் 04

புரெவிப் புயலின் காரணமாக வடக்கு மாகாணத்தில் மட்டும் 15 ஆயிரத்து 495 குடும்பங்களைச் சேர்ந்த 52 ஆயிரத்து 885 பேர் பாதிப் படைந்துள்ளமையோடு 2 ஆயிரத்து 370 வீடுகளும் சேதமடைந்துள் ளன மாவட்டச் செயலகத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. 02 »

## கொழும்பில் 2 மாதங்களில் மட்டும் 10 ஆயிரம் பேருக்குக் கொரோனா

மேல் மாகாணத்தில் கடந்த இரண்டுமாதங்களில்கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 17 ஆயிரத் தைக் கடந்துள்ளது.

கொழும்பு 02 »

## மாவீரர் நாளில் 'புரேவி' வந்திருந்தால் மகிழ்ச்சி



### சபையில் பொன்சேகா சின்னத்தனம்

தமிழ் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு பிரதேசத்தை ஊடறுத்துச் சென்ற புரெவி சூறாவளி, கடந்த வாரம் நடைபெற்ற மாவீரர் 02 »

## சிறைச்சாலை கைதிகள் 11,500 பேருக்கு பி.சி.ஆர்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 28 ஆயிரம் வரையான கைதிகளில் 11 ஆயிரத்து 500 பேருக்கு 02 »

## ஐவர் உயிரிழப்பு மரணம் 129

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் ஐவர் உயிரிழந்துள் 02 »

## தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் கட்சியான

# தமிழ்க் கூட்டமைப்பை தடைசெய்தே தீருவோம்!




### நாடாளுமன்றில் கோட்டாவின் பிரதானி அமைச்சர் சரத் வீரசேகர கடும் மிரட்டல்

கொழும்பு, டிசெம்பர் 04

தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் அந்த இயக்கத்தின் அரசியல் கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் கட்சியைத் தடை செய்தே தீருவோம்.

– இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர. 02 »



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுப்பிய ஒரு இளம் சிங்கத்தின் கர்ஜனை – மன்னிக்கவும் இளம் புலியின் உறுமல் – நாடாளுமன்றத்தில் எதிரொலித்த விதத்தைப் பார்த்து அவர்கள் ஒவ்வொருவரும் நிச்சயமாகப் புளகாங்கிதம் அடைய முடியும்.

அதேசமயம், கடந்த பத்து ஆண்டுகளாக இந்த உறுமலை நாடாளுமன்றத்தில் எதிரொலிக்க வாய்ப்பளிக்காமல் தவறிழைத்து விட்டோமோ என்று அவர்கள் மனவேதனைப்படுவதும் தவிர்க்க முடியாமல் இருக்கும்.

தனி ஒரு மனிதனாக நாடாளுமன்றத்தின் அனைத்து சிங்களப் பேரினவாதிகளுக்கும் கம்பீரக் குரலில், சற்றும் அசைந்து கொடுக்காமல், துணிச்சலுடன் பதிலடி கொடுத்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இந்திய மைதானத்தில் பந்துகளை நாலாபுறமும் பவுண்டரி, ஸிக்ஸர்களுக்கு மாறி, மாறி விரட்டிக் கொண்டிருந்த விராட் கோஹ்லி போலவே நேற்றுத் தோற்றமளித்தார்.

பேரனார் ஜீ.ஜீ.பொன்னம்பலம் நாடாளுமன்றத்தை அதிர வைத்த பேச்சாளர் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். அதை நான் பார்த்தவன் அல்லன். ஆனால் தந்தையார் குமார் பொன்னம்பலத்துடன் நெருக்கமாகப் பழகியிருக்கிறேன். மகன் கஜேந்திரகுமாருடனும் கூடத்தான்.

ஆனால் நேற்றைய அவரது நாடாளுமன்றப் பேச்சு அற்புதமானது. ஆற்றொழுக்கான ஆங்கில நடையில் சரளமாக, ஒரு தேர்ந்த அரசியல் விற்பன்னனாக தமிழர்களின் உறுதியான நிலைப்பாட்டை அவர் அடுக்கிய விதம் எழுத்தில் – வார்த்தைகளில் – கொண்டு வரமுடியாத அற்புதம்.

எதிரணியில் பேரினவாதிகளின் சீற்றம் அதிகரிக்க அதிகரிக்க அவரது பதில்களின் சூடும் அதிவேகத்துடன் வந்தது.

ஒரு கலக்கமில்லை, ஒரு பின்னடைவில்லை.

அந்தப் பேச்சின் வீடியோப்பதிவை ஒரு தடவை போட்டுப் பாருங்கள், தேடி எடுத்துக் கேளுங்கள் என்று நான் பரிந்துரைப்பேன். உங்களுக்கு ஆங்கிலம் விளங்காவிட்டாலும் கூட அந்த 19 நிமிடப் பேச்சை ஒரு தடவை பாருங்கள். தமிழன் என்று நீங்கள் நிமிர்ந்து நிற்கலாம்.

இன்னொரு விடயம்.

தமது பேச்சின் கணிசமான பகுதிகளில் பேரினவாதப் போக்காளர் அமைச்சர் சரத்வீரசேகரவை பிய்த்து உதறினார் அவர். எதற்காகத் தெரியுமா? தமிழ்க் கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்ற பேச்சுக்காக.

தானாடாவிட்டாலும் சதை ஆடும் என்பார்கள். அந்த மாதிரி இருந்தது கூட்டமைப்புக்காகக் கஜேந்திரகுமார் குமுறியது.

குறுக்கீடுகளினால் அவருக்கு வழங்கப்பட்ட 14 நிமிட பேச்சுத்தடைப்பட, தமிழ்க் கூட்டமைப்பின் கொறடா சிறீதரன் எழுந்து கூட்டமைப்பின் நேரத்தில் ஐந்து நிமிடத்தை அவருக்கு வழங்குவதாக அறிவித்து, தமிழரின் ஐக்கியத்தை சிங்கள அரசியல்வாதிகள் முன் உறுதியாக நிலைநாட்டிக் காட்டினார்.

அதைப் பார்த்த போது எனக்குள் ஒரு கற்பனை தோன்றியது.

இதேபோல –

நாடாளுமன்றத்தில் சம்பந்தன், சுமந்திரன், கஜேந்திரகுமார், சி.வீ.விக்னேஸ்வரன் நால்வரும் ஒன்றுபட்டு ஒரே குரலில் பேரினவாதிகளை எதிர்கொண்டால்...?

நாடாளுமன்றத்தில் சிம்மக் கர்ஜனையை புலிகளின் சீற்ற உறுமல் நிச்சயம் சமாளித்து அடக்கி விடும்...!

அப்படி ஒன்றிணைவரா?

நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை...!

–மின்னல்–

## வட மாகாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு மாகாணத்தில் வீசிய புரெவி புயலின் காரணமாக இதுவரை யாழ்ப்பாணக் குடாநாட்டிலே 10 ஆயிரத்து 872 குடும்பங்களைச் சேர்ந்த 37 ஆயிரத்து 87 பேர் பாதிப்படைந்துள்ளமையோடு 2 ஆயிரத்து 142 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என மாவட்டச் செயலகத்தினால் அனர்த்த முகாமைத்துவப் பிரிவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதேநேரம் இவ்வாறு பாதித்த 37 ஆயிரத்து 87 பேரில் 1,072 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 687 பேர் 33 நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் சேதமடைந்த 2 ஆயிரத்து 142 வீடுகளில் 40 வீடுகள் முழுமையாக அழிவடைந்துள்ளன என அறிக்கையிடப்பட்டுள்ளது.

மயிலிட்டி பகுதியில் நிறுத்தி வைத்திருந்த நீண்ட நாள் படகுகளில் 12 படகுகள் உட்பட மாவட்டத்தில் பல படகுகள் சேதமடைந்துள்ளன.

**முல்லைத்தீவில்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் 536 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 581 பேர் பாதிப்படைந்துள்ளமையோடு 35 வீடுகள் சேதமடைந்துள்ளன. அதேநேரம் சேதமடைந்த 35 வீடுகளில் ஒரு வீடு முழுமையாகவே அழிவடைந்துள்ளது.

**மன்னாரில்**

மன்னார் மாவட்டத்தில் மட்டும் 3 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 4 பேர் பாதிப்படைந்துள்ளமையோடு 300 கடற்கலன்களும் சேதமடைந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 8 நலன்புரி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு அங்கே 217 குடும்பங்களைச் சேர்ந்த 827 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதேபோன்று பலர் உறவுகளின் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு 3 ஆயிரத்து 11 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 31 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பேசாலையில் 200 வாடிகள் முழுமையாக அழிவடைந்துள்ளன.

இதேபோன்று 07 ட்றோலர்களும் 03 பிளாஸ்ரிக் படகுகளும் முற்றாக அழிவடைந்துள்ளன. பகுதியளவில் 23 படகுகளும், 10 ட்றோலர்களும் சேதமடைந்துள்ளன.

418 மீனவர்களின் வலைகள் முற்றாக நாசமாகிய வகையில் இதுவரையான சேதமாக 31 மில்லியன் ரூபா கணக்கிடப்பட்டதாக மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

**கிளிநொச்சியில்**

கிளிநொச்சியிலே 948 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 789 பேர் பாதிப்படைந்துள்ளமையோடு 136 வீடுகள் பகுதியளவிலும் ஒரு வீடு முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரும் குளமான இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 25 அடியைத் தொட்டது.

**வவுனியாவில்**

இதேபோன்று வவுனியா மாவட்டத்திலே 137 குடும்பங்களைச் சேர்ந்த 424 பேர் பாதிப்படைந்துள்ளமையோடு 57 வீடுகளும் பகுதியாகச் சேதமடைந்துள்ளன.

## ஐவர் உயிரிழப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

னர்.

நான்கு ஆண்களும், பெண்ணொருவருமே உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்களில் நால்வர் 70 வயதடைக் கடந்தவர்கள். அத்துடன், அனைவரும் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

கொழும்பு 2 ஐச் சேர்ந்த 78 வயதுடைய ஆண் ஒருவரும், கொழும்பு – 10 ஐச் சேர்ந்த 85 வயதுடைய ஆண் ஒருவரும், கொழும்பு – 12 ஐச் சேர்ந்த 89 வயதுடைய ஆண் ஒருவரும், கொழும்பு – 10 ஐச் சேர்ந்த 71 வயதுடைய ஆண் ஒருவரும், கொலன்னாவ பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 129 ஆக அதிகரித்துள்ளது.

# கிழக்கில் 280 பேருக்கு கொரோனாத் தொற்று

கிழக்கு மாகாணத்தில் நேற்று மேலும் 23 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அ.லதாகரன் தெரிவித்தார்.

இதுவரையில் அம்பாறை மாவட்டத்தில் 172 பேருக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 92 பேருக்கும், திருகோணமலை மாவட்டத்தில் 16 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய கிழக்கு மாகாண மொத்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 280 ஆக அதிகரித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில், நேற்று 1,389 பேருக்கு பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

# 26 ஆயிரத்தைத் தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை!

## நேற்று 628 பேர் அடையாளம்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 628 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 26 ஆயிரத்து 38 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய 728 பேர் நேற்று தொற்றில் இருந்து குணமடைந்துள்ளனர். இதன்படி குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 19 ஆயிரத்து 32 ஆக அதிகரித்துள்ளது. தற்போது வைத்தியசாலைகளில் 6 ஆயிரத்து 877 பேரே சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 129 பேர் உயிரிழந்துள்ளனர்.

## தமிழ்க் கூட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீளுருவாகினால் அதற்கான பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏற்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குச் சார்பாகச் செயற்பட்டால் கட்சி தடை செய்யப்படும்.

பொல்பொட், ஹிட்லர் உட்பட சர்வதேசத்தில் போராட்டங்களை நடத்தியவர்களின் தலைவர்களது கட்சிகள் முடக்கப்பட்டன. ஆனால், தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை தடை செய்யப்படவில்லை. இதற்குப் போர் முடிந்த பின்னரும் மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய கருணையே காரணம் – என்றார்.

## சிறைச்சாலை கைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டுள்ளது என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனாத் தொற்று ஏற்படும் கைதிகளை கந்தகாடு, கல்லேல்ல தனிமைப்படுத்தல் நிலையங்களில் வைத்து சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கைதிகளைப் பார்வையிட தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது. புதிய கைதிகளைத் தனித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறைச்சாலைகளில் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் சுகாதார உபகரணத் தொகுதிகளையும் வழங்கியுள்ளோம் – என்றார்.

## கொழும்பில் 2 மாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்டத்தில் 10 ஆயிரத்து 140 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 6 ஆயிரத்து 502 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் ஆயிரத்து 73 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் 878 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் கொழும்பு மாவட்டத்தில் 402 பேரும், கம்பஹா களுத்துறை மாவட்டத்தில் 188 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 106 பேரும் உள்ளடங்குகின்றனர்.

## பயணிகள் குழப்பம்

ஓமானிலிருந்து இலங்கைக்கு நேற்று அழைத்து வரப்பட்டிருந்த 20 பேர் பி.சி.ஆர். பரிசோதனை செய்வதற்குத் தம்மிடம் பணம் இல்லை எனத் தெரிவித்து எதிர்ப்பு வெளியிட்டனர்.

நேற்று காலை 7.40 மணியளவில் ஓமானில் இருந்து 54 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த நிலையில் அவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது அவர்களில் 20 பேர் பி.சி.ஆர். பரிசோதனையைச் செய்வதற்கு தம்மிடம் பணம் இல்லை என்று தெரிவித்து எதிர்ப்பில் ஈடுபட்டனர் என்று விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பின்னர் பயணிகளின் கோரிக்கையை ஆராய்ந்த அதிகாரிகள், விமான நிலையத்தில் அமைந்துள்ள இராசாயன பகுப்பாய்வு நிலையத்துக்கு அனுப்பி அவர்களுக்கான அந்தப் பரிசோதனையை முன்னெடுத்தார்கள்.

## மாவீரர் நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாளின்போது வந்திருந்தால் சந்தோசமடைந்திருக்கலாம். தமிழ் மக்களுக்குச் சேதம் ஏற்பட வேண்டும் என நான் இப்படிக் கூறவில்லை.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்த ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ் மக்கள் இறுதிப்போரில் கொலை செய்யப்படவில்லை. மாறாக விடுதலைப் புலிகள் இயக்கமே கட்டாயப்படுத்தி தமிழ் இளைஞர்களை முன்னணியில் நிறுத்திப் போராடினார்கள். அப்படியிருந்தும் நாங்கள் பலரையும் மீட்டோம். புனர்வாழ்வுக்கு அனுப்பினோம்.

இலங்கை உட்பட உலகின் பல நாடுகளிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டதாகும். இங்கிலாந்தில் கூட பிரபாகரனின் பதாதையொன்று காட்சிக்கு வைக்கப்பட்டபோது பொலிஸாரினால் அகற்றப்பட்டது. எமது நாட்டில் அது செய்திருந்தால் நாடாளுமன்றத்திலும் எதிர்ப்பு வெளியிட்டிருப்பார்கள்.

எமது தரப்பிலுள்ள மனோ கணேசன் கூட மாவீரர் நாள் குறித்து நியாயப்படுத்தி கருத்து வெளியிட்டிருந்த போதிலும் அது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும்.

சிலர் ஜே.வி.பியுடன் மாவீரர்களை ஒப்பீடு செய்கிறார்கள். ஆனால், ஜே.வி.பியினர் மிகவும் சிறிதளவான போராட்டத்தை நடத்திய போதிலும் நாட்டைப் பிரிக்கும் வகையில் செயற்படவில்லை. மீண்டும் இந்த நாட்டில் பிரிவினைவாதம் தலை தூக்க இடமளிக்கமாட்டோம் – என்றார்.

# கிழக்கு தமிழ் மக்களுக்கு கல்வியில் பெரும் பாதிப்பு

## கலையரசன் எம்.பி. கவலை



கிழக்கு மாகாணத்தில் கல்வி தொடர்பான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு விகிதாசார அடிப்படையில் மேற்கொள்வதால் தமிழ் மக்கள் மிகப்பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை 2021 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் கல்வி அமைச்சு, இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

கிழக்கு மாகாணத்தில் பல பகுதிகள் இன்னமும் யுத்தப் பாதிப்பிலிருந்து மீளவில்லை. அதேபோன்று பல பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் மீளக் குடியேறவும் இல்லை. அத்துடன் பெருமளவானோர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்று விட்டனர். கிழக்கிலிருந்து ஒன்றரை லட்சம் பேர் வரையில் இந்தியாவில் அகதிகளாகவுள்ளனர். இவர்களை மீளவும் அழைத்து வர நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் கல்வி தொடர்பான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு விகிதாசார அடிப்படையில் மேற்கொள்வதால் தமிழ் மக்கள் மிகப்பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மொழிமூல பாடசாலைகள் 98 உள்ளன. இவற்றில் நாவிதன்வெளி கல்முனை வலயத்தில் 48 பாடசாலைகளை உள்ளடக்கி தனியான கல்வி வலயம் ஒன்றை உருவாக்க நாம் மாகாண சபை ஊடாகத் தீர்மானமெடுத்து அதனை கல்வி அமைச்சின் அனுமதிக்காக அனுப்பிய போதும் அதற்கான அனுமதி இன்றுவரை கிடைக்கவில்லை.

மட்டக்களப்பில் கூட மட்டக்களப்பு மத்தி என்ற தனி வலயம் உருவாக்கப்பட்டு அது மிகவும் சிறப்பாக செயற்படுகின்றது. எனவே நாவிதன்வெளி கல்முனை வலயத்தில் 48 பாடசாலைகளை உள்ளடக்கி தனியான கல்வி வலயம் ஒன்றை உருவாக்க கல்வி அமைச்சு அனுமதியளிக்க வேண்டும்.

இதேவேளை எமது பகுதிகளுக்கு வரும் அபிவிருத்திகளைத் தடுத்து நிறுத்தி வேறுபகுதிகளுக்கு திருப்பும் வேலைகளும் இடம்பெறுகின்றன. எமது பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலுள்ள கட்டடங்கள் மிகப்பழமையானவை . 70,75 வருடங்களுக்கு முற்பட்டவை.

மாணவர் ஒன்று கூடல் நடந்தபோது பாடசாலைக்கட்டடம் இடிந்து விழுந்த சம்பவமும் நடந்துள்ளது. எனவே எமது பகுதி பாடசாலைக் கட்டடங்கள் தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்த வேண்டும். எமது பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு வரும் ஆசிரியர்கள் சிறிது நாள்களிலேயே அரசியல்வாதிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி நகர்ப்புற பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்று சென்று விடுகின்றனர். இதனால் பின்தங்கிய பிரதேச பாடசாலைகள் பாதிப்பை எதிர்கொள்கின்றன. இதுதொடர்பிலும் கல்வி அமைச்சு கவனம் செலுத்த வேண்டும். – என்றார்.

# இன்று நாட்டை ஆள்பவர்கள் படித்த முட்டாள்களே ஆவர்!

## லக்ஷ்மன் கிரியெல்ல கிண்டல்



கொழும்பு, டிசெ.04

சுயாதீன ஆணைக்குழுக்களை உருவாக்க வாக்களித்தவர்கள், இன்று சுயாதீன ஆணைக்குழுக்களை அழிக்கவும் வாக்களித்துள்ளனர். எந்தவொரு கொள்கையும் இல்லாத படித்த முட்டாள்களே இன்று ஆட்சி நடத்துகின்றனர் என எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை 2021 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் கல்வி அமைச்சு, இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

எமது ஆட்சிக்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிகள் தொடர்பிலான பிரச்சினைக்கு முழுமையாகத் தீர்வுகளை பெற்றுக்கொடுத்தோம். ஒரு காலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் தமக்கான விடுதிகளை கேட்டு ஆர்ப்பாட்டம் செய்த காலம் இருந்தது. வீதி ஊர்வலங்களைக் கூட நடத்தியுள்ளனர்.

ஆனால் எமது ஆட்சியில் பல்கலைக்கழகங்களுக்காக 24 விடுதிகளை புதிதாக உருவாக்கினோம். புலமைப்பரிசில் மாணவர்களுக்கு மடிக்கணினிகளை பெற்றுக்கொடுக்க கடன் உதவிகளைப் பெற்றுக்கொடுத்தோம். புலமைப்பரிசில் தொகையை ஐந்தாயிரம் ரூபாவாக அதிகரித்தோம். பல்கலைக்கழகங்களுக்கான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தோம். அதுமட்டுமல்ல நாம் அன்று 'வைபை'பற்றியும் 'டப் 'பற்றியும் பேசியபோது எம்மை பார்த்து சிரித்தனர். ஆனால் இன்று அதுவே அத்தியாவசிய தேவையாக மாறியுள்ளது.

நாம் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கும் முயற்சிகளை எடுத்த வேளையில் அதற்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினர். சைட்டம் கல்வியகத்தை உருவாக்கியவர்களே அதனை எதிர்த்தனர். ஆனால் இன்று மீண்டும் அவர்களே ஆட்சிக்கு வந்தவுடன் மீண்டும் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கு முயற்சிகளை எடுத்து வருகின்றனர். எமது மாணவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டே பல வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்தோம்.

ஆனால் நாம் ஆரம்பித்த வேலைதிட்டங்களையே இன்று அரசாங்கம் முன்னெடுத்து செல்கின்றது. நாம் பல்கலைக்கழக சுதந்திரத்தை வழங்கினோம். அது அத்தியாவசிய தேவையாகும். பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனத்தில் இன்று அரசியல் தலையீடுகளே ஏற்பட்டுள்ளன. ஆனால் நாம் சுயாதீனமாக அதற்கான அங்கீகாரத்தை வழங்கினோம்.

இன்று பல்கலைக்கழகங்கள் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளன. ஜி.எல்.பீரிஸ் போன்றவர்களே இந்த மோசமான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றமை வருத்தமளிக்கிறது. தீர்மானங்கள் முன்னெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கீழ் சென்றுவிட்டது. எமது கல்விக்கான அழிவே இதுவாகும்.

வரலாறு இதனை சுட்டிக்காட்டும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. சுயாதீன ஆணைக்குழுக்களை உருவாக்க வாக்களித்தவர்கள், இன்று சுயாதீன ஆணைக்குழுக்களை அழிக்கவும் வாக்களித்தனர். எந்தவொரு கொள்கையும் இல்லாத படித்த முட்டாள்களே இன்று ஆட்சி நடத்துகின்றனர். இவர்களை போன்ற நபர்களால் தான் நாடு நாசமாகிக்கொண்டிருக்கின்றது.– என்றார்.

# சிகிச்சைபெற்ற மஹர சிறை கைதி தப்பியோடிய நிலையில் மாட்டினார்!

கொழும்பு, டிசெ.04

மஹர சிறைச்சாலை அமைதியின்மையின்போது காயமடைந்து ராகம, கொழும்பு வடக்கு போதான வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த கைதியொருவர் நேற்றிரவு தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்ற கைதி சிறைச்சாலையின் புலனாய்வு அதிகாரிகளால் ஒருகொடவத்தை பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 26 அறிக்கைகளை பதிவுசெய்துள்ளனர்.

அதேநேரம் அமைதியின்மைக்கான முக்கிய காரணம் மற்றும் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பாக விசாரணைகள் மற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதன்படி எட்டு மருத்துவர்கள், இரு ஆண் தாதியர்கள், சிறைச்சாலை தலைமை அதிகாரி உட்பட 10 சிறை அதிகாரிகள், காயமடைந்த ஆறு நபர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் கண்காணிப்பாளர் தலைமையில் சிறப்புக் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அஜித் ரோஹன உறுதிப்படுத்தினார்.

# மஹர சிறைச்சாலை உயிரிழப்பு மரண விசாரணை அறிக்கையை அரசு உடன் வெளியிடல் வேண்டும்!

## நளின் பண்டார வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.04

மஹர சிறைச்சாலை கலவரத்தில் மரணித்தவர்களின் மரண விசாரணை அறிக்கையை வெளிப்படுத்தவேண்டும். மரணித்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கின்றோம் என எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தில் இதுவரை 11 பேர் மரணித்துள்ளனர். ஆனால் அவர்களின் பெயர் விவரங்களை இதுவரை சம்பந்தப்பட்டவர்கள் வெளிப்படுத்தாமல் இருக்கின்றனர்.



மரணித்தவர்கள் யார் என அறிந்துகொள்ளும் உரிமை சிறைச்சாலையில் இருக்கும் கைதிகளின் உறவினர்களுக்கு இருக்கின்றது.

சம்பவத்தில் தங்களது பிள்ளையும் பாதிக்கப்பட்டிருக்குமோ என்ற சந்தேகத்தில் இன்னும் சிறைச்சாலைக்கு அருகில் உறவினர்கள் கதறி அழுகின்றனர்.

மேலும் மரணித்தவர்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்தாமல் இருப்பதன் மூலம் இதில் பாரிய சதித்திட்டம் இருக்கவேண்டும்.

சிறைச்சாலையில் இருந்தவர்களில் அதிகமானவர்கள் பிணை வழங்கப்பட்டவர்கள். கொவிட் காரணமாக அவர்கள் தொடர்ந்தும் அங்கே தங்கவைக்கப்பட்டிருந்திருக்கின்றனர்.

அத்துடன் மரணித்த 11 பேரில் 10 பேருக்கு கொவிட் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் பரிசோதனை அறிக்கை இல்லை. கொரோனா என தெரிவித்து அனைவரையும் கொண்டுபோய் எரித்துவிடுவார்கள்.

அதன் பின்னர் மரண விசாரணை தேவையில்லை. 11 பேருக்கும் அதிகமானவர்கள் மரணித்திருப்பர் என்றே சந்தேகிக்கின்றோம். இது பாரிய மனித உரிமை மீறலாகும்.

அதனால் மரணித்தவர்கள் அனைவரதும் மரண விசாரணை அறிக்கையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். சர்வதேசத்தின் கவனம் இதுதொடர்பாக செலுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் இதனை சாதாரணமாக நினைத்துக்கொள்ளக்கூடாது. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தத்தமக்கு வந்தால்தான் தெரியும்

தனக்கு வந்தால்தான் தெரியும் தலையிடியும் காய்ச்சலும் என்பார்கள்.

தென்னிலங்கை ஆட்சிப் பீடத்தின் மனித உரிமை மீறல்கள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள், அட்டகாசங்கள், சட்டத்தைத் தமக்கு ஏற்றவாறு வளைத்து எதிர்த்தரப்பில் இருப்போர் மீது முறையற்ற விதத்தில் ஏவி விடுதல் போன்றவை குறித்தெல்லாம் இந்தத் தீவின் சிறுபான்மையினரான தமிழர்கள் குமுறி எழுந்து முறைப்பாடு செய்தபோது அவற்றைக் கவனியாது புறந்தள்ளி, உதாசீனம் செய்து, நடந்து கொண்ட தெற்கு மக்கள் இப்போது அந்த விடயங்களைத் தாமே பட்டுணரும் நிலைமை வந்திருக்கின்ற போது துடிக்கின்றனர்.

இலங்கையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்படும் இடங்கள் பொதுவாக இரண்டு.

ஒன்று – பொலிஸ் நிலையங்கள், இராணுவ தடுப்பு மையங்கள் மற்றும் படையினரின் ஒளிவு மறைவான விசாரணை இடங்கள்.

அடுத்தது – சிறைச்சாலைகள், தடுப்புக் காவல் நிலையங்கள்.

இந்த இரண்டிலுமே மிகவும் மோசமான மனித உரிமை மீறல்கள், மனித மாண்புகளுக்கு மாறான கொடூரங்கள் பெரியளவில் இடம் பெறுகின்றன என்பது தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும் நன்கு தெரியும்.

அவர்கள் எவரும் இவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை ஏதும் எடுக்கவேயில்லை.

மாறாக, தத்தமக்குத் தேவையான விடயங்களை சட்ட முறையற்ற அராஜக மார்க்கங்களில் மேற்கொள்வதற்காக இது போன்ற சித்திரவதைக் கூடங்கள், சட்டவிரோத விசாரணை மையங்கள் நடப்பதை ஆசீர்வதித்து, அனுமதித்து 'வழிகாட்டி' அவர்களே முன்னெடுத்தனர்.

சிறைகளில் தமிழர்களுக்கு – தமிழ்க் கைதிகளுக்கு – எதிராக அட்டூழியங்கள் இழைக்கப்படுகின்றன என்று தமிழர்கள் முறைப்பாடு செய்த போதெல்லாம் அவை குறித்து யாரும் சிந்திக்கவேயில்லை. கவனிக்கவும் இல்லை.

1983 ஜூலைக் கலவரத்தின் போது வெலிக்கடையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐம்பத்திரண்டு தமிழ்க்கைதிகள் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு, கண்கள் தோண்டப்பட்டு, குரூரமாகத் தாக்கப்பட்டு, கோரமான முறைகளில் கொல்லப்பட்டனர்.

ஆனால் இந்தக் கொடுஞ்செயலுக்காக சிங்கள ஆட்சிப்பீடம் வெட்கப்படவில்லை. வேதனையும் தெரிவிக்கவில்லை. கொடூரம் புரிந்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவும் இல்லை. தண்டிக்கப்படவும் இல்லை.

தலையிடியும் காய்ச்சலும் இப்போது தெற்குக்கே வந்திருக்கின்றன. அவற்றின் வேதனை இப்போது அவர்களுக்குப் புரியத் தொடங்கியிருக்கும்.

ஏற்கனவே மஹிந்தவின் ஆட்சிக் காலத்திலும் வெலிக்கடையில் சிங்களச் சிறைக் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். அது போன்ற அராஜகம் இப்போது மஹர சிறையிலும் கொடூரமான முறையில் அரங்கேறியிருக்கின்றது.

அந்தக் கொடூரம் தொடர்பான விடயங்கள் வெளியே வராமல் அடக்குவதற்கு – ஒளித்து விரிப்புக்குக் கீழ் போட்டு மறைப்பதற்கு – கொரோனாப் பரவல் தடுப்புச்சட்ட விதிகளைத் தந்திரமாக, மிக நுட்பமாகப் பயன்படுத்துகின்றது ஆட்சிப்பீடம்.

தமிழர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைவேந்த முற்பட்ட சமயத்திலும் அதைத் தடுப்பதற்கு இப்படித்தான் மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டமை போல கொவிட் தடுப்புச் சட்ட விதிகளைத்தான் அரசு பயன்படுத்தியது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், தியாகி திலீபன் நினைவேந்தல், மாவீரர் தின நினைவேந்தல்களைத் தடுப்பதற்கு – தனது அரசியல் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு – கொவிட் சட்ட விதிகளைத்தான் ராஜபக்ஷ அரசு ஏவி விட்டது.

அது சட்ட முறையற்றது எனத் தமிழர்கள் குரல் எழுப்பிய போது அதற்கு ஆதரவுக் குரல் தென்னிலங்கையில் இருந்த வரவில்லை. நீங்களே பட்டுத் தெளியுங்கள் என்று அசிரத்தையாக நின்றது தென்னிலங்கை.

இப்போது அதே கொவிட் தொற்றுத் தொடர்பான சட்ட விதிகளைப் பயன்படுத்தி, சிறையில் கொல்லப்பட்ட பதினொரு பேரின் மரணங்கள் தொடர்பாக பிரேத பரிசோதனை நடத்தாமல், மரண விசாரணை முன்னெடுக்காமல், அந்தச் சடலங்களை தீயிட்டு எரித்து சாம்பலாக்குவதுடன், நடந்த குற்றத்தையும் அடியோடு புதைத்து மூடி மறைக்கப் போகின்றது கொழும்பு.

தமிழர்களுக்கு எதிராக சிறைக் கலவரங்கள், அட்டூழியங்கள் வெடித்த போதும் –

கொவிட் தடுப்பு விதிகள், அரசின் அரசியல் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் விதத்தில் தமிழருக்கு எதிராகத் தவறாகப் பாய்ந்த போதும் –

தென்னிலங்கை வாய்மூடி, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இப்போது முறை தென்னிலங்கைக்கு. அதற்கு எதிராக இதே அத்துமீறல்கள் ஆட்சித் தரப்பால் ஏவப்படுகின்றன.

பதிலுக்கு சேர்ந்து பார்த்திருப்பதைத் தவிர தமிழருக்கும் வேறு வழி இல்லை என்பதுதான் நிலைமை.

# 2 இலட்சத்து 31 ஆயிரம் வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் கிடப்பில்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையில் 2 இலட்சத்து 31 ஆயிரம் வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாது உள்ளன என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதி சேவை ஆணைக்குழுவின் தரவுகளுக்கு அமைய இந்தத் தகவலை வெளியிடுகின்றேன். அதற்கமைய 49 ஆயிரத்து 801 வழக்குகள் ஐந்து வருடங்களாக விசாரணை செய்யப்படுகின்றன. 20 ஆயிரத்து 568 வழக்குகள் 5 முதல் 10 வருடங்களாக விசாரணை செய்யப்படுகின்றன. 8 ஆயிரத்து 947 வழக்குகள் 10 முதல் 15 வருடங்களாக விசாரணை செய்யப்படுகின்றன. 3 ஆயிரத்து 418 வழக்குகள் 15 முதல் 20 வருடங்களாக விசாரணை செய்யப்படுகின்றன.

அத்துடன், 4 ஆயிரத்து 620 வழக்குகள் 25 முதல் 25 வருடங்களாக விசாரணை செய்யப்படுகின்றன.

வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் வழக்கு விசாரணை ஆகியன இரு வேறு விடயங்களாகும்.

கொரோனாத் தொற்று பரவும் காலப் பகுதியில் வழக்கு விசாரணைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையின் கீழ் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் 70 இற்கும் அதிகமான தீர்ப்புக்கள் இந்தக் காலப் பகுதியில் வழங்கப்பட்டுள்ளன – என்றார்.

# புரெவி புயல் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்க முப்படையும் தயார்!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

அனர்த்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கவும் முப்படையினரும் தயாராக உள்ளனர் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வவுனியா, மூன்று முறிப்பு பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு 10 லட்சம் ரூபா செலவில் இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீட்டையும், வீட்டு தளபாடங்களையும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பயனாளியிடம் கையளித்தார்.

அதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள புயலுடன் கூடிய அனர்த்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி, மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு முப்படையினரும் தயார் நிலையில் உள்ளனர்.

அனர்த்தம் ஏற்படும் பகுதிகளுக்குச் சென்று அவர்கள் மீட்பு மற்றும் மனிதாபிமான பணிகளில் ஈடுபடத் தயாராகவுள்ளனர்.

அத்துடன் கொவிட் – 19 தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தேவையான நடவடிக்



கைகளை எடுத்துள்ளது. ஆயுர்வேத வைத்தியர் ஒருவரால் கொவிட் 19 தொற்றுக்கு எதிரான மருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்பட்டாலும் அது தொடர்பில் ஆய்வு செய்து உண்மை நிலையைக் கண்டறியுமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எனவே நாம் அதனை ஆய்வு செய்து வருகின்றோம். அதன் பின்னரே அது தொடர்பில் உறுதியாகத் தெரிவிக்க முடியும் எனக் கூறினார்.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் சமன்பந்துல சேன, வன்னிப் படைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா, இராணுவ உயர் அதிகாரிகள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# விமான நிலையங்களை மீண்டும் திறக்க அனுமதி!

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு ஏதுவாக விமான நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சு தொடர்பான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி சுகாதார அதிகாரிகளின் அனுமதி கிடைத்தவுடன் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய விமான நிலையங்களைத் திறக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

16 2020
பால்நிலை வன்முறைக்கு எதிரான
16 நாள் செயற்பாடு - 2020
16 Days of Activism Against Gender Based Violence
JSAC
குடும்பத்தில் சமத்துவம் சமாதானம் பேணி
சமுதாயத்தில் பெண்களிற்கெதிரான
வன்முறைகளை ஒழித்திடுவோம்.
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center

# பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு புதிய உத்திகளை பயன்படுத்துவோம்!

## பிரதமர் மஹிந்த திடசங்கற்பம்



புதிய உத்திகளைப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பொறுப்பு மற்றும் சவால்களை அரசாங்கம் ஏற்க தயார் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்த 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை பொருளாதார மாநாட்டில் இணையவழி காணொலி ஊடாக கடந்த (புதன்கிழமை) கலந்துகொண்டபோதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

உலகிலுள்ள பல நாடுகளையும் விட இலங்கை, கொவிட் 19 தொற்றை மிகவும் முறையான விதத்தில் கட்டுப்பாட்டுக்கள் வைத்திருப்பதை அதிகளவானோர் ஏற்றுக்கொண்டுள்ளனர். அத்துடன் பொருளாதாரத்தை முறையாக நிர்வகித்து முன்னோக்கிச் செல்வதற்கு முடியும் என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அது மட்டுமின்றி, இதுவரை கொவிட் 19 தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நாடுகள் வரிசையில் இலங்கையானது முன்னிலை வகிப்பதுடன், பல துறைகளிலும் பொருளாதார முன்னேற்றத்தை சாதகமான முறையில் பதிவு செய்வதற்கு எம்மால் முடிந்துள்ளது.

எமது நாடு எதிர்நோக்கியுள்ள முதன்மையான சவால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்கு வழங்கிய வாக்குறுதியின் படி மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்துவதாகும்.

இதனிடையில் கொவிட் 19 தொற்றுக்கு மத்தியில் மதிப்பிடப்பட்ட பொருளாதார வீதம், அந்த முயற்சிக்குப் பாரிய தடைகள் உள்ளன எனவும் பலரால் கணிக்கப்பட்ட போதிலும் அவ்வாறன தடைகள் ஏற்படுவதைக் குறைத்து பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்துவது எமக்குள்ள பாரிய சவாலாகும்.

இந்தக் குறிக்கோள்களை அடைய அரசாங்கம் புதிய உத்திகளைக் கையாண்டுள்ளது என உங்களுக்குத் தெரியும். நாட்டிலுள்ள வர்த்தகர்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்களுக்காக 'கடன் விலக்குகளை' வழங்குமாறு அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கினோம்.

நாட்டின் வெளிப்புற கணக்கை முறையாக நிர்வகிப்பதன் மூலம் ரூபா மதிப்பைப் பாதுகாத்து அரசாங்கத்தின் கடன் அழுத்தங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டோம்.

50 லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு கொவிட் – 19 தொற்றுக்கு முகங்கொடுப்பதற்கு நேரடி நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதன் மூலம் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு நிவாரணம் வழங்க எம்மால் முடிந்தது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படையாதிருப்பதற்கு வரி மற்றும் வட்டி சலுகைகளை பெற்றுக் கொடுத்தோம். நீர், மின்சாரம், அனுமதி பத்திர கட்டணம் ஆகியவற்றைச் செலுத்த எமால் கால அவகாசம் வழங்கப்பட்டது. குத்தகை தவணை மற்றும் வட்டி செலுத்துவதற்கான சலுகைகள் வழங்கப்பட்டன.

இந்த அனைத்து நடவடிக்கைகளிலும் அரச ஊழியர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களின் செயல்திறன்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமை காரணமாக நாட்டில் பெரும்பான்மையான மக்கள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்படும் அபாயமும் இருந்தது. மேலும் சில சந்தர்ப்பங்களில் சிலர் அவ்வாறு நடைபெறும் வரை எதிர்பார்த்திருந்திருப்பார்கள் என்றும் சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கும்.

ஆனாலும் இந்தப் பிரச்சினைகள் அனைத்துக்கும் மத்தியில் இந்த சவால்களை நேரடியாக எதிர்கொள்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு எமது அரசாங்கத்துக்கு முடிந்தது.

எதிர்வரும் ஆண்டுகள் எமக்கு தீர்மானம் மிக்க ஆண்டுகளாகும். எமது நாட்டின் பொருளாதார ரீதியான முன்னோக்கிய பயணத்தை வலுப்படுத்தும் காலமாகும். எதிர்வரும் இந்தக் காலப்பகுதி வெற்றியளிக்க வேண்டுமாயின், நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்தச் சவாலை நிர்வகித்துக் கொள்ள வேண்டும். அதற்கு, நாம் புதிய உத்திகளைச் செயற்படுத்த வேண்டும்.

## மாத்தளை மேயர் பதவி நீக்கம்



மாத்தளை மாநகர சபையின் மேயர் டல்ஜித் அலுவிஹாரே பதவி நீக்கப்பட்டுள்ளார்.

அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டமையைத் தொடர்ந்து மத்திய மாகாண ஆளுநரால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய அவர் இவ்வாறு பதவி நீக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டில்ஜித் அலுவிஹாரேவிற்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தனவால் கடந்த 24 ஆம் திகதி மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு கமகேவிடம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நியூஸிலாந்து நாடாளுமன்றில் முதல் உரையை ஆற்றிய இலங்கைப் பெண்!



நியூஸிலாந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான முதல் இலங்கையைச் சேர்ந்த பெண் வனுஷி வால்டர்ஸ் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றில் தனது முதல் உரையை நிகழ்த்தியுள்ளார்.

தனது உரையில் அவர் சிங்கள மற்றும் தமிழில் சுருக்கமான அறிக்கைகளை வெளி யிட்டமையுடன், மனித உரிமைகள் அனைவருக்கும் சொந்தமானது என்பதையும் நினைவுபடுத்தினார். கொழும்பின் முதல் மேயராக இருந்த சரவணமுத்துவின் பேத்திதான் வனுஷி வால்டர்ஸ்.

நியூஸிலாந்து நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் தலைமையிலான தொழிலாளர் கட்சி அமோக வெற்றியைப் பெற்றது.

இந்தத் தேர்தலில் வனுஷி வால்டர்ஸ் வெற்றி பெற்றுள்ளார். நியூஸிலாந்து நாடா ளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்படும் முதல் தமிழர் என்ற பெருமையை பெற்றுள்ளார் வானுஷி வால்டர்ஸ்.

நியூஸிலாந்தின் வடமேற்கு ஆக்லாந்தில் ஹாமில்டன் கிரிக்கெட் வீரர் ஜேக் பெசன்ட்டை எதிர்த்து போட்டியிட்டார் வானுஷி. பெசண்ட் 12 ஆயிரத்து 272 வாக்குகளையும் வானுஷி வால்டர்ஸ் 14 ஆயிரத்து 142 வாக்குகளையும் பெற்றனர். இலங்கையில் இருந்து பெற்றோருடன் 5 வயதில் நியூஸிலாந்தில் குடியேறி யவர் வனுஷி வால்டர்ஸ்.

இலங்கையில் யாழ்ப்பாணம் மானிப்பாயை பூர்வீகமாகக் கொண்டவர் வனுஷி. இவரது தந்தை வழி பாட்டி லூசியா சரவணமுத்து, 1931 இல் இலங்கை அரசு பேரவையின் வடக்குத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்.

தாத்தா சரவணமுத்து, கொழும்பு முதல் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது பெயரில்தான் கொழும்பில் உள்ள விளை யாட்டு அரங்கம் சரவணமுத்து விளையாட்டு மைதானமாக அழைக்கப்படுகிறது. வனுஷியின் தந்தை ஜனா ராஜநாயகம், தாயார் பவித்ரா. வால்டர்ஸ் என்பவரை வனுஷி திருமணம் செய்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## ஒரே நாட்டுக்குள் வாழமுடியாது அதை அரசே நிரூபித்துள்ளது!

### சிவசக்தி ஆனந்தன் காட்டம்



தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்றாக இணைந்து ஒரே நாட்டுக்குள் வாழ முடியாது என்ற செய்தியை தான் இந்த அரசாங்கம் திரும்ப திரும்ப தமது நடவடிக்கைகள் மூலம் தெரியப்படுத்துகின்றது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

சேமமடு, செட்டிகுளம், ஒதியமலை படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவு தினத்தை நினைவு கூர்ந்து ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

1984 ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் சேமமடு, செட்டிகுளம், ஒதியமலை ஆகிய மூன்று கிராமங்களுக்குள் அதிகாலையில் புகுந்து அப்பாவித் தமிழ் பொது மக்களைக் கைதுசெய்து மட்டுமன்றி சுட்டும் ,வெட்டியும் கொலை வெறித்தாக்குதலை நடத்தியிருந்தனர்.

சேமமடு பகுதியில் 52 பேரும், ஒதியமலை பகுதியில் 32 பேரும், செட்டிகுளம் பகுதியில் 22 பேரும், மொத்தமாக 106 பேர் படுகொலை செய்யப்பட்டனர். படுகொலை செய்யப்பட்ட அனைத்து மக்களும் வறிய விவசாய குடும்பங்களைச் சேர்ந்த குடும்பத் தலைவர்கள் மற்றும் இளைஞர்களுமாவர்.

இந்தப் படுகொலை நினைவு நாள் ஆண்டு தோறும் முன்னெடுக்கப்பட்டு உயிர் நீத்த ஆன்மாக்களுக்கான ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் உறவினர்களும், அந்தப் பிரதேச வாசிகளும் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் இந்த தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அந்த அப்பாவி பொதுமக்களின் நினைவேந்தல் நாள் (02.12.2020) வழமைபோன்று உயிர் நீத்த உறவுகளின் நினைவாக வருடாந்த நினைவேந்தலை செய்வதற்கான ஏற்பாடுகள் அந்தந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் செட்டிகுளம் பகுதியில் பொலிஸார் திடீரென பிரசன்னமாகி நினைவேந்தலுக்குத் தடைவிதித்ததோடு, உயிர்நீத்த உறவுகளை நினைவேந்த அனுமதிக்க முடியாது என்று எச்சரித்து சென்றிருக்கின்றார்கள்.

கடந்தவாரம் உயிர் நீத்த போராளிகள் மற்றும் பொதுமக்களை நினைவு கூருவதற்கு வடக்கு கிழக்கிலே நீதிமன்றத்தினூடாகப் பொலிஸார் தடையுத் தரவு பெற்றிருந்தனர். இதே போல் இந்தக் கிராம மக்களும் உறவுகளும் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளுக்குத் தங்களின் சமய காலாசார முறைப்படி செய்ய வேண்டிய கடமைகளைக் கூடச் செய்யமுடியாத துர்ப்பார்க்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த நாட்டிலே உண்மையான சமாதானம் நல்லிணக்கம் வரவேண்டுமாக இருந்தால் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்துக்கமைவாக உயிர் நீத்தவர்களுக்கான கடமைகளைச் செய்வதற்கு அனுமதி வழங்கியிருக்க வேண்டும். அதை விடுத்து இவற்றை செய்யாத வரை எந்தக் காலத்திலும் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்றாக இணைந்து ஒரே நாட்டுக்குள் வாழ முடியாது என்ற செய்தியைத் தான் இந்த அரசாங்கம் திரும்ப திரும்ப தமது நடவடிக்கைகள் மூலம் தெரியப்படுத்துகின்றது.– எனத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரச கட்டுப்பாட்டிலுள்ளவர்கள் கொலையுண்டமை மிலேச்சத்தனமான ஆட்சியின் வெளிப்பாடே ஆகும்

## அநுரகுமார திசாநாயக சாடல்

கொழும்பு, டிசெ.04

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த வர்களை துப்பாக்கி சூடு நடத்தி கொலை செய்தமை ஒருபோதும் ஏற்றுகொள்ள முடியாத விடயமாகும். இது அரசாங்கத் தின் மிலேச்சத்தனமான செயற்பாட்டை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

– இவ்வாறு மக்கள் விடுதலை முன் னணியின் தலைவர் அநுரகுமார திசா நாயக சபையில் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட அனைவருக்கும் கொவிட் வைரஸ் இருப்பதாக கூறி அவர் களின் உடல்களை 24 மணிநேரத்துக் குள் எரித்து உண்மைகளை புதைத்து விட அரசாங்கம் முயற்சிக்கும் என்ற சந் தேகம் எழுவதாகவும் அவர் கூறினார்.

மேலும் தெரிவித்த அவர் –

மஹர சிறைச்சாலை கலவரத்தை கட் டுப்படுத்த எடுத்த முயற்சியில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் சிறைச்சாலைக்குள் 11 கைதிகள் கொல் லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 107 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் புதிய அறிக்கையில் கூறப்படுகின்றது. அரசாங்கத்தின் பொறுப்பில் இருந்த 11 கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர். 100 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந் துள்ளனர். அவர்களில் ஒரு சிலர் அவசர சிகிச்சை பிரிவில் உள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சம் பவம் சிறைச்சாலையில் இருந்து கைதி கள் சிலர் தப்பிக்க எடுத்த முயற்சியாக ஒருசிலர் கூறுகின்றனர். வித்தியாசமான போதை மாத்திரைகளைப் பாவித்தமை யால் ஏற்பட்ட கலவரம் எனவும் ஒரு சிலர் கூறுகின்றனர். இது தொடர்பான உண்மை, பொய் என்ன என்பதை விசாரணைக ளின் மூலமாகக் கண்டறிய வேண்டும்.

ஆனால் கொவிட் –19 வைரஸ் தொற்று சிறைச்சாலைக்குள் பரவியதை அடுத்து, கடந்த சில நாள்களாகவே கைதிகள் இடையில் குழப்பநிலை ஏற்பட்டிருந்தது. சிறைச்சாலைகளுக்குள் மாத்திரம் ஆயி ரத்துக்கும் அதிகமான கொவிட் நோயா ளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர் என அமைச்சர் சபையில் தெரிவித் தார். 2020 ஆம் ஆண்டு அரசாங்கத் தின் அறிக்கையின் பிரகாரம் நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் 11 ஆயிரத்து 792 கைதிகளுக்கான இட வசதிகள் இருப்ப தாகக் கூறுகின்ற போதிலும் இப்போது வரையில் 28 ஆயிரத்து 750 பேர் சிறை களில் உள்ளனர். இது நூறுக்கு இருநூறு ஐம்பது வீத அதிகரிப்பாகும். இந்த கைதி களில் 20 ஆயிரம் பேர் விளக்கமறியல் கைதிகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மஹர சிறைச்சாலையை எடுத்துக்



கொண்டால் 80 வீதமானவர்கள் விளக்க மறியல் கைதிகளாக தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். அவர்கள் குற்றவாளிகள் என எந்தவொரு நீதிமன்றத்திலும் உறுதிப் படுத்தப்படவில்லை.

அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள வர்களை துப்பாக்கிச் சூடு நடத்திக் கொல் கின்றமை இதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் இடம்பெற்றுள்ளது. இப்போதும் 11 பேரை அரசாங்கம் கொன் றுள்ளது. இலங்கை அரசாங்கமாக முன்னெடுக்கும் இந்த செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தவர் களைக் கொலைசெய்தமையை ஒரு போதும் ஏற்றுகொள்ள முடியாத விடய மாகும். அரசாங்கத்தின் மிலேச்சத்தனம ான செயற்பாட்டை இது வெளிச்சம் போட் டுக் காட்டியுள்ளது.

இவ்வாறான கொலைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த கொலைகள் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்ற னவா? விசாரணை அறிக்கை இந்த சபைக்கு சமர்ப்பிக்கப்படுமா? கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றாத வண்ணம் அரசாங்கம் எடுக்கும் நடவ டிக்கை என்ன? சிறைச்சாலைகளுக்குள் கொவிட் – 19 வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்த எடுக்கும் நடவடிக்கை என்ன? சிறைச்சாலைகள் சட்ட ஒழுங்குகளுக்கு அமைச்சர் கொல்லப்பட்ட சகல கைதிகள் தொடர்பில் மரண விசாரணை நடத்தப்பட வேண்டும். ஆகவே மரண விசாரணை நடத்தப்படுமா? கொல்லப்பட்டவர்களின் உடல்களை அவர்களின் உறவினர்களி டம் ஒப்படைக்கப்படுமா? இப்போது எழு கின்ற சந்தேகம் என்னவென்றால், கொல்லப்பட்ட அனைவருக்கும் கொவிட் வைரஸ் இருப்பதாகக் கூறி அவர்களின் உடல்களை 24 மணிநேரத்துக்குள் எரித்து உண்மைகளை புதைத்துவிட முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் உள்ளது. – என்றார்.

# காற்று மூலமான மின்சார உற்பத்தி நிலையம் முன்னாரில் 8 ஆம் திகதி திறக்க நடவடிக்கை!

## அமைச்சர் துமிந்த திஸநாயக்க தெரிவிப்பு

அரசாங்கத்தின் சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டம் முறையாக செயற்படுத்தப் படுகிறது. எதிர்வரும் 8 ஆம் திகதி மன்னாரில் காற்று மின்சார உற்பத்தி நிலையம் பிரதமர் தலைமையில் திறந்து வைக்கப்படும் என சூரிய சக்தி ,காற்று மற்றும் நீர்மின்சார உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இலங்கை மன்ற கல்லூரியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் ,

சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டம் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அரசியல் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டு தற்போது சுதந்திரமான முறையில் அபிவிருத் தித் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின் றன.

சூரிய சக்தி, நீர்மின்சார உற்பத்தி அபிவிருத்தி யை மேம்படுத்த சிறந்த திட்டங்கள் வகுக்கப்பட் டுள்ளன. 2016 ஆம் ஆண்டு காற்று மின்சார உற்பத்தி நிலையம் உருவாக்க ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.



அரசியல் காரணிகளுக்கு முக்கியத்துவம் வழங்கி மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் கடந்த அரசாங்கத்தில் இடை நிறுத்தப்பட்டன. இவ்வாறான செயற்பாடுகள் கடந்த அரசாங் கத்தின் பலவீனத்துக்கு ஒரு காரணியாகவும் அமைந்தது.

தேசிய மின் உற்பத்தியில் மின்சார உற்பத்தி களை அதிகமாக இணைக்க விசேட செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மன்னார் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள காற்று மின் சார உற்பத்தி நிலையம் பிரதமரால் திறந்து வைக்கப்படவுள்ளது. – என்றார்.

# மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் சுகாதார அமைச்சருக்கு எச்சரிக்கை!

இலங்கை மருத்துவ சபை யின் தலைவரையோ உறுப்பி னர்களையோ தாம் நினைத்த வாறு பதவிகளிலிருந்து நீக்கு வதற்கு எவராலும் முடியாது. அவ் வாறான முறையற்ற செயற்பா டுகளில் ஈடுபட வேண்டாம் என்று சுகாதார அமைச்சரிடம் கேட்டுக் கொள்ளவதாக அரச மருத்துவ அதிகாரிகள் பேரவையின் தலை வர் வைத்திய நிபுணர் ருக்ஷான் பெல்லன தெரிவித்தார்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியுள் ளவை வருமாறு –

இலங்கை மருத்துவ சபை என் பது வெறுமனே மருத்துவர்கள் மாத்திரமன்றி, சுகாதாரத்துறை சார் பணியாளர்களையும் பதிவு செய்துகொண்டிருக்கும் ஒரு கட்ட மைப்பாகும். எனவே 1924 ஆம் ஆண்டில் விசேட நாடாளுமன்றத் தீர்மானமொன்றின் ஊடாக ஸ்தா பிக்கப்பட்ட இந்தக் கட்டமைப்பு சுயாதீனமானதாகும். எனினும் அதன் தற்போதைய நிலை மிகவும் மோசமானதாக இருக்கின்றது.

இந்த நாட்டின் சுகாதாரசேவை யின் தலைவராகவே இலங்கை மருத்துவ சபையின் தலைவர் கருதப்படுகின்றார். அதேபோன்று அதன் தலைவரையோ உறுப் பினர்களையோ தாம் நினைத் தவாறு பதவிகளிலிருந்து நீக்கு வதற்கு எவராலும் முடியாது.

எனவே அவ்வாறான செயற் பாடுகளை முன்னெடுக்க வேண் டாம் என்று எமது சுகாதார அமைச்சரி டம் கேட்டுக்கொள்கின்றோம். இதற்கு முன்னர் பதவிவகித்த எந்த வொரு சுகாதார அமைச்சரும் தற்போதைய அமைச்சரைப் போன்று தன்னிச்சையாகச் செயற்பட்டவர்கள் அல்லர். எனவே மருத்துவசபை என்பது அரசியலை மையப்படுத்திய ஒன்றல்ல என் பதைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.– எனத் தெரிவித்தார்.

# விமான சேவைகளுக்கு புரெவி பாதிப்பில்லை!

நாட்டில் மோசமான வானிலையை ஏற்படுத்திய புரெவி சூறாவளியால் கட்டுநாயக்க, விமான நிலை யத்தின் சேவைக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படவில்லை என விமான நிலையத்தின் பொறுப்பா ளர்கள் தெரிவித்துள்ளனர்.


அத்துடன் இன்றைய தினம் அனைத்து விமான சேவைகளும் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டன எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.


அதன்படி கொரோனா பரவல் காரணமாக மத் திய கிழக்கில் சிக்கித் தவித்த மேலும் 333 இலங்கையர் கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள் ளனர்.

கட்டாரிலிருந்து 49 பேரும், ஜேர்தானிலிருந்து 284 பேரும் இவ்வாறு இன்றை தினம் நாடு திரும் பியுள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவரும் விமான நிலை யத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்ப டுத்தப்பட்டமையுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கை களுக்காகவும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டப் பந்தல் மரக்கிளை வீழ்ந்து சேதம்!





வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உற வினர்கள், தமது உறவினர்களை மீட்க கோரி நடத்தி வரும் போராட்டப்பந்தலுக்கு மேல், மரக்கிளை வீழ்ந்து சேதத்திற்குள்ளாகியுள்ளது.

வவுனியா – கண்டி வீதியிலுள்ள வீதி அபிவிருத்தி தி ணைக்களத்திற்கு முன்பாக 1,384 ஆவது நாளாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பந்தல் அமைத்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தாழமுக்கம் காரணமாக ஏற்பட்ட கடும் காற்றால் பந்தல் அமைந்துள்ள இடத்துக்கு அருகில் காணப்பட்ட மரத்தில் இருந்து பாரிய கிளையொன்று முறிந்து வீழ்ந்தமையால், பந்தல் சேதமடைந்துள்ளது.

குறித்த பந்தலுக்குள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களான வயோதிப தாய்மார் சிலர் இரவில் தங்கி வருகின்ற போதிலும், அசாதாரண நிலை காரண மாக நேற்றுமுன்தினம் இரவு குறித்த பந்தலுக்குள் எவரும் தங்கியிருக்காமையால் உயிர்ச்சேதமோ காய மடையும் நிலையோ ஏற்பட்டிருக்கவில்லை.

# சமூகத்தில் கொரோனா பாதிப்பைத் தடுக்கவே சிறையில் உச்சபட்ச அதிகாரத்தை பாவித்தோம்!

## பாதுகாப்புச் செயலர் தெரிவிக்கிறார்



சமூகத்தில் கொரோனா பாதிப்பை தடுக்கவே சிறையில் உச்சபட்ச அதிகாரத்தை பயன்படுத்த வேண்டியேற்பட்டது என்று பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

கொழும்பு - தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது மேலும் தெரிவித்த அவர் -

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவத்தால் கைதிகள் சிலர் உயிரிழந்துள்ளமையோடு, பலர் காயமடைந்துள்ளமையால் சிறைச்சாலை அதிகாரிகள் உயர்மட்ட அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளனர் எனச் சிலர் கூறுகின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு செயலாளர் என்றரீதியில் நான் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அதிகாரத்தை பயன்படுத்துவதற்காக சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட வேறு இடத்திற்கு மாற்றப்படவிருந்த 186 கைதிகள் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்று சமூகத்தில் நடமாடுவார்களாயின் எந்தளவிற்கு அபாய நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதை அனைவராலும் சிந்திக்க முடியும்.

எனவே சமூகத்திற்கு ஏற்படவிருந்த பாரிய பாதிப்பை தடுப்பதற்காக சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அந்த சந்தர்ப்பத்தில் உயர்மட்டத்தில் அதிகாரங்களை உபயோகிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

எனவேதான் வேறு சிறைச்சாலைகளிலிருந்து 200 அதிகாரிகளையும் விசேட அதிரடிப்படையினர் 200 பேரையும் மற்றும் பொலிஸார் 200 பேரையும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சிறைச்சாலை நிலைவரத்தை அதிகாரிகள் மீண்டும் தம்வசப்படுத்திக்கொள்ள அவர்கள் உச்சபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தினார்கள்.

அதற்கமைய செவ்வாய்கிழமை பகல் 1.30 மணியளவில் சிறைச்சாலைக்குள் சென்ற அதிகாரிகள் சுமார் 10 நிமிடங்களில் நிலைமையை வழமைக்கு கொண்டு வந்தார்கள்.

இதன்போது கைதிகளிடம் காணப்பட்ட மருந்துகள், சமையலறையில் உபயோகிக்கப்படும் கத்திகள் என்பவை அவர்களிடமிருந்து அகற்றப்பட்டுள்ளன. - என அவர் மேலும் தெரிவித்தார்.

# சஹ்ரானுடன் தொடர்புடைய குற்றச்சாட்டு சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு



சஹ்ரான் ஹாசீமுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 12 சந்தேக நபர்களை மீண்டும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அந்தவழக்கு கடந்த புதன்கிழமை , அம்பாறை மாவட்டம் கல்முனை நீதிமன்ற நீதிவான் ஐ.என். றிஸ்வான் முன்னிலையில் இரு வேறு சந்தர்ப்பங்களில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, காணொலி ஊடாக, சந்தேக நபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டமையைத் தொடர்ந்து 12 சந்தேகநபர்களையும் மீண்டும் எதிர் வரும் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.


இந்த விசாரணையின்போது மேலதிக அறிக்கைகள் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டு, மீண்டும் சந்தேகநபர்களிடம் விசாரணை மேற்கொள்வதற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் வைத்து கடந்த வருடம், மேற்குறித்த 12 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பின் தலைவரான சஹ்ரான் ஹாசீம் தலைமையில் பல்வேறு இடங்களில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு, அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 26 அன்று அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு தாக்குதல் சம்பவத்தின் பின்னர் அந்த அமைப்புடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நாட்டின் நாலாபுறமும் பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி தமிழ்ப் பாடசாலைகள் ஆளணி நிரப்பப்படவேண்டும்!

## ஹக்கீம் வலியுறுத்தல்



கண்டி மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவிவரும் ஆளணிப் பற்றாக்குறைகள், பௌதிக வளத் தேவைகள் போன்றவை நிவர்த்திக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தினார்.

வரவு - செலவுத் திட்ட, கல்வி அமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

கண்டி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் குறிப்பாகத் தமிழ் மொழி மூல தேசிய பாடசாலைகள் பலவற்றிலும் ஆளணிப் பற்றாக்குறைகள், பௌதிக வளம் மற்றும் கட்டடத் தேவைகள் என்பன உட்பட ஏராளமான பிரச்சினைகள் காணப்படுகின்றன.

மடவளை மதீனா தேசிய பாடசாலை, கம்பளை ஸாஹிரா தேசிய பாடசாலை உட்பட பல பாடசாலைகள் இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களாக எதுவித புதிய கட்டட நிர்மாண வசதிகளும் செய்து கொடுக்கப்படாத நிலையில் அந்த தேசியப் பாடசாலைகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

கல்ஹின்ன தேசிய பாடசாலை, அக்குறணை சாஹிரா பாடசாலை, அக்குறணை அஸ்ஹர் மத்திய கல்லூரி போன்ற பல பாடசாலைகளில் சில தசாப்தங்களாகவே புதிய கட்டடங்கள் எவையும் நிர்மாணித்துக் கொடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

அத்துடன் இந்தப் பாடசாலைகளில் சில பாடவிதானங்களுக்குரிய ஆசிரிய குறைபாடுகளும் இருக்கின்றன என்பதை கல்வி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொழும்பில் மாத்திரம் கொரோனா!

இலங்கையில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை ஆரம்பமானது முதல் இதுவரை கொழும்பு மாவட்டத்தில் பதிவான மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அதன்படி, கடந்த ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பில் 10 ஆயிரத்து 140 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

குறிப்பாக நேற்றுமுன்தினம் மாத்திரம் கொழும்பு மாவட்டத்தில் 402 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேநேரம், நேற்றுமுன்தினம் கம்பஹா மாவட்டத்தில் 188 பேரும் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த 98 பேரும் அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை கண்டியில் 27 தொற்றாளர்களும் குருநாகலையில் 24 தொற்றாளர்களும் இரத்தினபுரியில் 24 தொற்றாளர்களும் மற்றும் புத்தளத்தில் 29 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 409 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு நந்திக் கடலில் மீன்பிடிக்கச் சென்றவர் மாயம்

முல்லைத்தீவு, நவ. 04

முல்லைத்தீவு நந்திக்கடல் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புரெவி புயல் நேற்றுமுன்தினம் மாலை வேளையில் முல்லைத்தீவு கரையூடாகக் கரையைக் கடந்துள்ள நிலையில் வடக்கு மாகாணத்தின் கடற்கரைப் பகுதிகள் மிகவும் கொந்தளிப்புடன் காணப்படுவதால் யாரும் மீன்பிடி நடவடிக்கைக்குச் செல்ல வேண்டாம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நந்திக் கடல் பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒருவர் இதுவரை கரை திரும்பாததையடுத்து அது தொடர்பில் முறையிடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்க பிரான்ஸ் அரசு நடவடிக்கை!



மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு பிரான்ஸ் அரசாங்கம் நடவடிக்கையெடுத்துள்ளதாக இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லவிட்ரு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்கு, கடந்த புதன்கிழமை மாலை இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லவிட்ரு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவனை சந்தித்த பிரான்ஸ் தூதுவர், மட்டக்களப்பு மாநகரசபையின் செயற்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார்.

அத்துடன் மாநகரசபையின் செயற்பாடுகள், மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் தேவைப்பாடுகள், மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் தூதுவருக்கு மாநகர முதல்வரால் விளக்கமளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் தொழில்வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலான தொழில்பேட்டைகளை அமைப்பதற்கான முதலீட்டாளர்களை இங்கு அழைப்பது தொடர்பிலும் தூதுவருடன் முதல்வர் கலந்துரையாடினார்.

# அடைமழையை அடுத்து வவுனியாவில் அகற்றப்படும் பழமை வாய்ந்த மரங்கள்

## ஏ - 9 வீதியின் ஒரு பகுதி மூடப்பட்டது





தொடரும் மழையுடனான கால நிலையை அடுத்து வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகக் காணப் பட்ட பழமை வாய்ந்த மரங்களை அகற் றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட தால் ஏ - 9 வீதியின் ஒரு பகுதி மூடப் பட்டது.

வங்களா விரிகுடாவில் உருவாகிய புரெவி புயல் காரணமாக வவுனியா மாவட்டத்தில் இயல்புவாழ்க்கை பாதிப்ப டைந்துள்ளதுடன் காற்றுடன் கூடிய மழை நீடித்த வண்ணமுள்ளது. இதன் காரணமாக வவுனியா பொலிஸ் நிலை யத்துக்கு முன்பாகவுள்ள பழமை வாய்ந்த மரங்களை அகற்றும் நடவ டிக்கை முன் னெடுக்கப்பட்டது.

வவுனியா பொலிஸாரின் ஒத்து ழைப்புடன் இலங்கைத் தொலைத் தொடர்பு நிலையத்தின் (எஸ்.எல்.ரி.) பாரவூர்தி வாகனத்தின் உதவியுடன் மரங்களை அகற்றும் நடவடிக்கை இடம்பெற்றது.

இதன் காரணமாக ஏ - 9 வீதியில் வவுனியா மணிக்கூட்டுக் கோபுர சந்தி யிலிருந்து வவுனியா நீதிமன்றவளாகம் வரையிலான பாதை ஒரு வழி பாதை யாக மாற்றப்பட்டது. (100)

## கிளிநொச்சியில் 882 பேர் பாதிப்பு; 94 வீடுகள் சேதம்

'புரெவி' சூறாவளியால் கிளிநொச்சி மாவட்டத்தில் 292 குடும்பங்களைச் சேர்ந்த 882 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய புள்ளி விவரம் தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை காலை 9 மணி வரை திரட்டப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படை யில் ஒரு வீடு முழுமையாகவும், 93 வீடுகள் பகுதியளவி லும் சேதமடைந்துள்ளன என்று அப்புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 2 பாதுகாப்பு அமைவிடங் களில் 24 குடும்பங்களைச் சேர்ந்த 88 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 67 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். அங்கு 19 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 144 குடும்பங்களைச் சேர்ந்த 397 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 78 குடும்பங்களைச் சேர்ந்த 249 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். ஒரு வீடு முழுமையாகவும், 68 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரி வில் 03 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

பாதிப்புகள் தொடர்பான தகவல்கள் தொடர்ந் தும் திரட்டப்பட்டு வருகின்றன.

## ரோஹண வெளியே; ரணவீர உள்ளே!

மஹர சிறைச்சாலை அமைதியின்மை தொடர் பில் விசாரணைகளை நடத்துவதற்காக நீதி அமைச்சால் நியமிக்கப் பட்ட குழுவிலிருந்து பொலிஸ் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதி பர் அஜித் ரோஹண வில கிய நிலையில், அவரது இடத்துக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித ரணவீர நியமிக்கப்பட் டுள்ளார்.

அத்துடன், இந்த அமைதியின்மை தொடர் பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.ஏ. டி.ஈ.எல்.ரந்தெனிய தலைமையிலான 12 பேரைக் கொண்ட குழு வொன்றும் விசாரணை களை ஆரம்பித்துள்ளது எனப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரி வித்தார்.

# இரணைதீவில் 131 பேர் சிக்கித் தவிப்பு உதவிக்கு படைகளை அழைக்கத் திட்டம்

தொழில் நிமித்தமாக இரணைதீவுக்கு சென்றிருந்த 131 பேர் கரை திரும்பமுடியாது அங்கு சிக்கித்தவித்து வருகின்றனர்.

கிளிநொச்சி, பூநகரி, இரணைதீவு பகுதி யில் 131 பேர் இரண்டு இடங்களிலே தங்கியி ருக்கின்றனர் எனவும் அவர்களிற்கு உடனடி உதவிப் பொருள்களை வழங்க விமானப் படை யின் உதவியைக் கோரவுள்ளனர் எனக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை மற்றும் காற்று என்பவற்றினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரை யாடல் இன்றுபிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. குறித்த சந்திப்பைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தருந்தார்.

இந்த ஊடக சந்திப்பின் போது -

கிளிநொச்சி மாவட்டத்திலே 455 குடும் பங்களை சேர்ந்த 1,342பேர் பாதிக்கப்பட்டுள் ளனர் எனவும், இதில் தற்காலிக வீடு ஒன்று முழுமையாக சேதமடைந் துள்ளதுடன், 135 வீடுகள் பகுதி அளவிலே சேதமடைந்துள்ளன எனவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்க ளிற்கான தேவை களை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஏற் பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தனித் தீவாக காணப்படுகின்ற இரணைதீவு பகுதியில் குடி யேறி வாழ்ந்துவரும் மற்றும் தொழி லின் நிமித்தம் சென்று தங்கியிருப்போருமாக 88 குடும்பங்களை சேர்ந்த 131பேர் அங்கு இரு வேறு இடங்களில் தங்கியுள்ளனர்.

அவர்களது தேவைகள் தொடர்பிலும் பிர தேச செயலாளர் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான உடனடி அத்தியாவசிய பொருள்களை வழங்குவதற்கான கடல் வழி போக்குவரத்துக்கள் எவையும் இல்லாத நிலையில் நிலைமை நீடிக்குமாக இருந்தால் விமானப்படையினரின் உத வியைக் கோரி அவர்கள் ஊடாக உடனடி அத்தியாவசிய பொருள்களை வழங்க கூடியதாக இருக்கும் என்றும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித் தார்.

இவ்வாறான சூழலில் கொவிட் 19 தொற்று தொடர்பிலும் மக்கள் விழிப்பாக செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் ஏற் பாட்டில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர்கள், நீர்ப்பாசன பொறியி யலாளராக, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதேச சபை செயலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## மஹர கலவரத்தில் ஈடுபட்ட 125 கைதிகள் அடையாளம்!

### அரசே பொறுப்பு என்கின்றனர் உறவினர்கள்

கொழும்பு, டிசெ. 03

மஹர சிறைச்சாலை அமைதியின்மைக் குக் காரணமானதாகக் கூறப்படும் 125 கைதி கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித் துள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட கைதி களுக்கு எதிராக, எதிர்வரும் நாள்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சிறைச்சா லைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மஹர சிறைச்சாலை அமை தியின்மைக்குக் கைதிகள் காரணம் அல்லர் எனவும், அரசின் பொறுப்பற்ற செயலே கார ணம் எனவும் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

800 பேர் இருக்க வேண்டிய சிறையில் 3 ஆயிரம் கைதிகளை அரசு அடைத்து வைத் திருந்தமை எந்த வகையில் நியா யம் என வும் அவர்கள் கேள்வி எழுப்பியுள் ளனர்.

அரசின் இந்தப் பொறுப்பற்ற செயல் கார ணமாகவே மஹர சிறையில் கொரோனாத் தொற்று பரவியது எனவும், அதனால் கொதிப் படைந்த கைதிகள் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஜனநாயக வழி யில் நீதி கோரி ஆர்ப்பாட்டம் செய்தபோது அரசு துப்பாக்கிகளால் வன்முறை வழியில் பதிலளித்துள்ளது எனவும் கைதிகளின் உற வினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

## கிளிநொச்சி வீட்டிலிருந்து வெடிப்பொருள்கள் மீட்பு!



கிளிநொச்சி இயக்கச்சி பனிக்கையடி எனும் கிராமத்தில் சில வெடிப்பொருள்கள் பொது மகன் ஒருவரின் வீட்டில் மறைத்து வைக் கப்பட்ட நிலையில் இராணுவத்தினரால் மீட் கப்பட்டுள்ளன.

தமக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவ லையடுத்து அந்த வீடு இன்று இராணுவத்தி னர் பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களால் சுற்றி வளைக்கப் பட்டது. நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். மீட்கப்பட்ட வெடிபொருள் கள் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத் துக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப் படுகிறது. மேலதிக விசாரணை கள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகிறது.

### தமிழ்த் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட

# திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் பட்ஜட் தோற்கடிப்பு

### மொட்டு, ஐ.தே.க., ஈ.பி.டி.பி., வரதர் அணி, மு.கா. ஓரணியில் எதிர்ப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளு கைக்குட்பட்ட திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செல வுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இவ் வரவு - செலவுத் திட்டம் தவிசா ளர் வைத்திய கலாநிதி ஈ.ஜீ.ஞானகுணா ளனால் வியாழன் சபையில் சமர்ப்பிக் கப்பட்டது.

இதையடுத்து 22 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் பகிரங்க வாக்கெடுப் புக்கு வரவு - செலவுத் திட்டம் விடப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் 7 உறுப்பினர்கள், சுயேச் சைக் குழுவின் 2 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதி நிதித் துவப்படுத்தும் உபதவிசாளர் நவ்பர் ஆகியோர் உட்பட 10 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி யின் 7 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்கள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) ஓர் உறுப்பினர், வரதர் அணியின் ஓர் உறுப் பினர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஓர் உறுப்பினர் உட்பட 12 உறுப்பினர் கள் எதிராக வாக்களித்தனர்.

அதற்கமைவாக வரவு - செலவுத் திட்டம் இரண்டு மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

# சிறைச்சாலை கைதிகளை விடுவிக்க நடவடிக்கை!

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 04

சிறைச்சாலைகளில் இடம்பெற்றுவரும் நெருக்கடிகளை குறைக்க 607 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கவும் மேலும் சிலருக்கு விரைவாக பிணை வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அத்துடன் மஹர சிறைச்சாலை கலவரம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள அமைக்கப்பட்ட குழுவின் இடைக்கால அறிக்கை ஒருவாரகாலத்தில் கிடைக்கும் என நீதி அமைச்சர் அலிசப்ரி உறுதியளித்தார்.

நாடாளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகள் இடம்பெற்றதன் பின்னர், சிறைச்சாலைகளில் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையில் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி நெருக்கடி நிலைமையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல முன்வைத்த கோரிக்கைக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:-

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தைத் தொடர்ந்து பல நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கின்றது. குறிப்பாக பொலிஸாருடனும் சட்டமா அதிபருடனும் கதைத்து அவர்களைப் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அதேபோன்று சிறைச்சாலையில் இருக்கும் 607 பேர் வரையானவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

அத்துடன் கைதிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் குற்றப்பத்திரிகைகளை மாற்றியமைத்து, அவர்களின் வழக்குகளை விரைவாக விசாரிக்கும்வரை அவர்களை பாதுகாப்பான இடங்களில் வைப்பது போன்ற பல நடவடிக்கை தொடர்பில், ஜனாதிபதி தலைமையில் அதிகாரிகள் மட்டத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இதுதொடர்பாக எடுக்கமுடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

அத்துடன் பிணை வழங்கினாலும் அவர்களை 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தவேண்டும். அப்போது அவர்களை வேறு இடமொன்றில் தனிமைப்படுத்துவதா அல்லது அவர்களின் வீடுகளிலே தனிமைப்படுத்துவதா என தற்போது தீர்மானித்து வருகின்றோம். அதேபோன்று பிணை வழங்க முடியாதவர்களை அவர்களின் சொந்தப் பிணையில் செல்ல 3 மாதம் வழங்குவோம். நாங்கள் செய்யக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

மேலும் மஹர சிறைச்சாலை கலவரம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. ஒருவாரத்தில் இதுதொடர்பான இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் 3 மாதங்களில் முழுமையான அறிக்கையைக் கையளிக்குமாறும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அறிக்கை கிடைத்ததுடன் அதனை சபைக்குச் சமர்ப்பிப்போம். - என்றார்.

# திருத்திய வரவு – செலவுத் திட்ட வரைவை நிதி அமைச்சர் சபைமுன் வைக்க வேண்டும்!

## அநுரகுமார சபையில் தெரிவிப்பு

2021 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டு வேளையில் புதிதாக மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார். இந்த அமைச்சுக்களுக்கான நிதி எங்கிருந்து ஒதுக்கப்படுகின்றது என சபையில் கேள்வி எழுப்பிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக, புதிய மூன்று அமைச்சுகளையும் கருத்தில் கொண்டு, தற்போது இடம்பெற்றும் குழுநிலை விவாதம் முடிவடைய முன்னர் திருத்தப்பட்ட புதிய வரவு – செலவு திட்டத்தை சபையில் நிதி அமைச்சர் முன்வைக்க வேண்டும் என்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது அரசாங்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அமைச்சுக்களுக்கான குழுநிலை விவாதம் இடம்பெற்று வருகின்றது. அமைச்சுக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு விவாதங்கள் இடம்பெற்றும் இந்நிலையில் புதிதாக மூன்று அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மக்கள் பாதுகாப்பு அமைச்சு, தொழிநுட்ப அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சொன்றும் உருவாக்கப்பட்டுள்ளன. இப்போது விவாதிக்கப்பட்டுள்ள விவாதத்தில் இந்த அமைச்சுகளின் கீழ் கொண்டுவரும் ஒரு சில நிறுவனங்கள் தொடர்பாக விவாதித்துக் கொண்டுள்ளோம். ஆனால் அமைச்சுகளுக்கு இன்னமும் நிதி ஒதுக்கப்படவில்லை. குறித்த அமைச்சருக்கு, அதிகாரிகளுக்கு, அமைச்சின் செயலணிக்கு, அமைச்சின் கட்டடக்கூலிக்கான நிதி எவ்வளவு என்பது குறிப்பிடப்படவில்லை.

எனவே இப்போது நடந்துகொண்டுள்ள விவாதம் மூன்று அமைச்சுகளுக்கான நிதி ஒதுகீட்டுகள் என்னவென்பது தெரியாது விவாதிக்கப்படுகின்றன. எனவே, இந்த புதிய மூன்று அமைச்சுகளையும் கருத்தில் கொண்டு, தற்போது இடம்பெற்றுக்கொண்டுள்ள குழு நிலை விவாதம் முடிவடைய முன்னர் திருத்தப்பட்ட புதிய வரவு – செலவு திட்டத்தை சபையில் நிதி அமைச்சர் முன்வைக்க வேண்டும்.

அவ்வாறு திருத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை என்றால் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மூன்று அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் இருக்க முடியாது, அந்தந்த அமைச்சுக்களின் சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்கவோ, வாகனங்களுக்கு எண்ணெய் வழங்கவோ அல்லது வேறு எந்த செயற்பாடுகளை முன்னெடுக்கவோ முடியாது. எனவே திருத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டமொன்று இந்த சபையில் முன்வைக்கப்படுமா எனத் தெரிந்துகொள்ள விடும்புகின்றேன் என சபையில் கேள்வி எழுப்பினார்.

இதன்போது பதில் தெரிவித்த அமைச்சரும் சபை முதல்வருமான தினேஷ் குணவர்தன –

ஜனாதிபதியின் சார்பில் பிரதமர் இந்த நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். அதேபோல் இப்போது புதிய அமைச்சுக்கள் இருந்தாலும் அங்கீகரிக்கப்பட்ட இந்த வரவு – செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள ஒரு சில நிறுவனங்கள் புதிய அமைச்சுக்கு மாற்றப்படுகின்றது. புதிதாக அமைச்சுக்களை உருவாக்கவில்லை. அவ்வாறு புதிய விடயங்கள் உருவாக்கப்படும் என்றால் இறுதி நாளுக்கு முன்னர் திருத்தப்பட்ட ஒதுக்கீடு குறித்து சபையில் அறிவிக்கப்படும். – என்றார். மீண்டும் கேள்வி எழுப்பிய அனுரகுமார எம்.பி –

நீங்கள் கூறும் விடயத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நிறுவனங்கள் மாற்றப்படுவது என்றால் அதனை அங்கீகரிக்க முடியும். ஆனால் புதிய அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மூன்று அமைச்சர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் என்ன என்பது அறிவிக்கப்படவில்லை. எனவே அதனை உடனடியாக சபைக்கு அறிவிக்க வேண்டும். அப்போதுதான் புதிய அமைச்சுக்கள் மீதும் விவாதம் நடத்தி இறுதியாக நிறைவேற்ற முடியும். – என்றார்.

# நாட்டை விட்டு வெளியேறியது புரெவி புயல்

இலங்கைக்குள் நிலைகொண்ட புரெவி சூறாவளி, நாட்டை விட்டு வெளியேறியுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், மீனவர்கள் இன்று வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

20 வருடங்களுக்குப் பின்னர் நாட்டுக்குள் பிரவேசித்த முதலாவது சூறாவளியாக புரெவி சூறாவளி வரலாற்றில் பதிவாகியுள்ளது.

2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதியே இலங்கைக்குள் இறுதியாக சூறாவளியொன்று பிரவேசித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வருமானம் குறைந்த குடும்பப் பிள்ளைகளை இலக்கு வைத்தே புலமைப் பரிசில் பரீட்சை

## நடத்த வேண்டும் என்கிறார் தலதா அத்துக்கோறள



குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களின் பிள்ளைகளைக் கருத்திற்கொண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று மாணவர்களுக்கு இணையத்தள வசதியை அரசாங்கம் செய்துகொடுக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

5 ஆம் தரம் புலமைப்பரிசில் பரீட்சை குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களின் பிள்ளைகளைக் கருத்திற்கொண்டே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் கடந்த 2019 மற்றும் 2020 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருக்கும் மாணவர்களைப் பார்க்கும்போது இந்த பரீட்சையின் நோக்கம் நிறைவேற்றப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. அதாவது, 2019 தரம் 5 புலமைப்பரீட்சைக்கு குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களின் பிள்ளைகள் 61 வீதமானவர்கள் தோற்றி இருந்தார்கள். அதில் 41 வீதமானவர்கள் சித்தியடைந்திருந்தார்கள்.

அதேபோன்று வருமானம் கூடிய குடும்பங்களின் பிள்ளைகள் 39 வீதமானவர்கள் பரீட்சைக்கு தோற்றி அதில் 59 வீதமானவர்கள் சித்தியடைந்துள்ளனர். 2020 பரீட்சையில் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களின் பிள்ளைகள் 63 வீதமானவர்கள் தோற்றியுள்ளனர். அதில் 37 வீதமானவர்களே சித்தியடைந்துள்ளனர். ஆனால்வருமானம்கூடியகுடும்பங்களின் பிள்ளைகள் 37 வீதமானவர்கள் கலந்துகொண்டதில் 63 வீதம் சித்தியடைந்துள்ளனர்.

ஏனெனில் 2020 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெற்ற காலத்தில் வசதிபடைத்த குடும்பங்களின் பிள்ளைகளுக்கு படிப்பதற்கு தேவையான மடிக்கணனி மற்றும் தொழிநுட்ப வசதிகள் இருந்தன. வருமானம் குறைந்த மாணவர்களுக்குஅந்தவசதிகள்இருக்கவில்லை. அதனால் இந்த பரீட்சையை வருமானம் குறைந்த குடுபங்களின் மாணவர்களை இலக்குவைத்து நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் கிராமப்புரங்களில் அரச பாடசாலைகளில் ஆரம்ப பிரிவுகளில் பாடசாலை நேரங்களில் ஆசிரியர்கள் பாடங்களை நடத்தாமல், மாலை நேர வகுப்புக்கு மாணவர்கள் கட்டாயப்படுத்தி அழைக்கப்படுகின்றனர். இதனால் வசதி குறைந்த மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அதனால் அரச பாடசாலை ஆசிரியர்கள்தொடர்பாகவும்கண்காணிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

மேலும் மாணவர்களுக்கு டப் வசதிகளை வழங்குவதற்கு எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. வைபை வலயங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தது. அப்போது எம்மை கொச்சைப்படுத்தினர். எமது நாட்டுக்கு இது பொருத்தமில்லை என்றார்கள். ஆனால் தற்போது நாடு எதிர்கொண்டுள்ள கொரானோ வைரஸ் தாக்கத்தில் டப் வசதி இருந்திருந்தால் அனைத்து மாண வர்களும் கஷ்டமின்றி கல்வியைத் தொடர்ந்திருப்பார்கள். அதனால் தற்போதாவது அரசாங்கம் இந்த வசதிகளை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நட வடிக்கை எடுக்கவேண்டும். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஈழத்துச் சிதம்பரமும், திருவாவடுதுறை ஆதீனமும்



வே.வரதசுந்தரம்

காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பர சிற்பத்தேர் உருவானவேளை பிரதம ஸ்தபதி சரவணமுத்து ஜெயகாந்த னுக்கு இத்திருப்பணிக்கு உரிய ஆலோசனைகளை யும், ஆசிகளையும் வழங்கியவர் திருவாவடுதுறை ஆதீனகுரு மகாசந்நிதானம் அருள்மிகு சீர்வளர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார். அத்துடன் இத்தேர்த் திருப்பணி செவ்வனே நிறைவேற வேண்டி திருவாவடுதுறை ஆதீன முதல்வர் அனுப்பிய ஆசியுரை இதோ:-

'பெருமானுக்குத் திருத்தேர் செய்திடும் சிவபுண்ணி யச் செயலில் பங்குகொண்டுள்ள நல்லன்பர்கள் யாவ ரும் இருமைப் பயன்களை எய்துவர் என்பது திண்ணம்'.

தன்னையடைந்தார்க்கு இன்பங்கள் நல்கும் தத்து வனாக விளங்கும் ஈழத்துச் சிதம்பரத்தில் கொலுவீற்றி ருக்கும் பரம்பொருளுக்கு உருவாகும் ஐந்து தளங்களைக் கொண்ட சித்திரத்தேரில் 108 ஆடல் வல்லானின் சிவ தாண்டவமும், 63 நாயன்மார்களின் வரலாறுகளும், 25 மகேஸ்வர மூர்த்திகளும் சிற்பமாக இடம் பெறுவது மகிழ்ச்சிக்கு உரியது.'

இந்துசமய விவகார அலுவல்கள் முன்னாள் அமைச் சர், முன்னாள் யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரு மான திரு. மகேஸ்வரன் அவர்களினால், அரங்கையில் நடைபெற்ற 22 ஆவது உலக இந்து மாநாட்டு ஞாபகார்த் தமாக அமைச்சின் பூரண நிதியுதவியுடன் அமைக்கப் பட்ட ஈழத்துச் சிதம்பர சைவசமய அறப்பணி நிலையம் திருவாவடுதுறை ஆதீன 23 ஆவது குருமகாசந்நிதா னம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் அருளாணைப்படி 2003 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி அங்குராப்பணம் செய்யப்பட்டது.

திருவாவடுதுறை ஆதீனம் 23வதுகுரு மகாசந்நி தானம் ஈழத்துச் சிதம்பரம் எழுந்தருளி அருள்மிகு ஆடல் வல்லான் அருட்கோலம் கண்டு வழிபாடு செய்தார்கள். இங்கு அப்பெரியார் எழுந்தருளியவேளை அடியார்க ளுக்கு விபூதி வழங்கி ஆசீர்வதித்தார். இது கேட்டு மகிழ் வார் இச்சிவனடியார்கள்.

சைவ ஆதீனங்களில் முதன்மைபெறும் திருவாவடு துறை ஆதீனம் சிவராஜதானி, சிவஞானப்பண்ணை, சிவஞானப்பேரரசு என்று எல்லாம் போற்றப்படுவது. இறைவி பசுவடிவில் இறைவனை வழிபட்ட தலமாத லால் இது திருவாவடுதுறை எனப்பெயர் பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம் கலைமகள் திருக்கோயில் போலிருக்கும் என்பர். சர்வகலாசாலை என்பார்கள்.

'எனக்கு உலகமெல்லாம் திருவாவடுதுறை மடத்தி லேயே இருந்தது' என்பார் உ. வெ. சுவாமிநாதையர் அவர்கள். தமிழுக்கு தொண்டு செய்த ஐயர் அவர்களை உருவாக்கியது, ஆளாக்கியது திருவாவடுதுறை ஆதீ னம் அல்லவா!

திருவாவடுதுறை ஆதீன முனிவராகக் கருதப்படுபவர் சிவஞான முனிவர். சிவஞான முனிவரின் சமாதித் திருக் கோயில் திருவாவடுதுறை ஆதீன தோட்டத்தில் உள்ளது. இவரே திருவாவடுதுறை ஆதீனக் குலதெய்வம். திரு மூலர் தவஞ்செய்த தலம், சேந்தனார் திருவிசைப்பா பாடிய தலம், திருமாளிகைத் தேவர் முத்தி பெற்ற தலம், மூவர் பாடிய தலம் என்று பல சிறப்புக்களை உடைய திருத்தலம் திருவாவடுதுறை.

சித்தர் சிவப்பிரகாசரின் வழியில் திருவாவடுதுறை ஆதீனம் தோன்றியது. சித்தர் சிவப்பிரகாசரின் சீடர் நமச்சிவாய மூர்த்திகள் திருவாவடுதுறையின் நிறுவுனர். திருவாவடுதுறை ஆதீனத்துக்கும், யாழ்ப்பணத்து நாவ லருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. எனவேதான் திருவாவடுதுறை ஆதீனகர்த்தரின் ஈழத்துச் சிதம்பர விஜயம் மேலும் பன்மடங்கு சிறப்பு பெறுகிறது.

கிறிஸ்தவ மதமாற்றம் காரணமாகச் சைவர்கள்பட்ட அவலம் கண்டு பொங்கியெழுந்து பல்லாக்கப் பணிகள். செய்து யாழ்ப்பாணத்தில் சைவத்தையும், தமிழையும் காத்தவர் என்பதாலும், நூற்பதிப்பு, செய்யுள்களுக்கு உரையெழுதி சைவவினாவிடை, பாலபாடம் போன்ற நூல்களை இயற்றியமை காரணமாகவும், இலங்கை யிலும், இந்தியாவிலும் பாடசாலைகள், அச்சகங்களை நிறுவிப் பல பணிகளை ஆற்றியமை காரணமாகவும், எழுதுவது போன்று சொற்பொழிவுகள் மூலம் சைவத் தைப் பேணிக்காத்தமை காரணமாகவும் யாழ்ப்பா ணம் ஆறுமுகம்பிள்ளையை நாவலர் என்று அழைத்து கௌரவித்தது திருவாவடுதுறை ஆதீனம்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் மற்றுமொரு சிறப்பு அன்னதானம். அது சோறு மணக்கும் மடம். அன்னம் பாலிக்கப்பெறும் அரும்மடம். இத்தகைய திருவாவடு

**ஈழத்துச் சிதம்பர யாத்திரை 05**

துறை ஆதீனத்தின் இருபத்து மூன்றாவது குருமகா சந்நிதானம் சீர்வளர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், காசு முதல் கன்னியாகுமரி வரை யாத் திரை செய்து திருவாவடுதுறைக் கிளை மடங்களைப் புனருத்தாரணம் செய்தவர்.

திருவாவடுதுறை ஆதீனத்துக்கென ஒரு தனித் திங்கள் இதழை ஆரம்பித்து மெய்கண்டார் என்று அவ்விதழுக்கு பெயருமிட்டார். 1925ஆம் ஆண்டு ஆரம்பித்த இவ்விதழ் சைவத்துக்குப் பெருந்தொண்டு ஆற்றி வருகிறது.

சைவசித்தாந்த கற்கை நெறியினை 1992 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 48இடங்களில் இதற்குரிய மை யங்களை அமைத்தவர். இக்கற்கை நெறி நிறைவு பெறும் வேளையில் பங்குபற்றுநருக்கு, தேர்ச்சிபெறு வோருக்கு 'சித்தாந்தரத்தினம்' என்ற விருதும் சான்றித ழும் வழங்கப்படுகின்றன. இதுவும் அன்னாரின் பணி யாகும்.

திருவாவடுதுறைத் திருத்தாண்டகத்தில் திருநாவுக் கரசர் திருவாவடுதுறை உறையும் நம்மிறைவனைப் பாடுவதைப் பாருங்கள். வல்வினை நோய்கள் நம்மை



வந்தடைந்து நாம் துன்புறா வண்ணம் நம்மைக் காத்தருளுமாறு உருக்கமாக வேண்டுகிறார்.

**திருவேயென் செல்வமே தேனேவானோர்**
**செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க**
**உருவேயென் உறவே என் ஊனே ஊனின்**
**உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற**
**கருவேயென் கற்பகமே கண்ணேகண்ணிற்**
**கருமணியே மணியோடுபாவாய் காவாய்**
**அருவாயவல் வினைநோய் அடையாவண்ணம்**
**ஆடுவதன் துறையுறையும் அமரர் ஏறே.**

# சாதாரண தர பரீட்சையை மார்ச் மாதம் நடத்த உத்தேசம்

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை எதிர்வரும் மார்ச்மாதம் நடத்த முடியும் என்று எதிர்பார்க்கின்றோம். - இவ்வாறு கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரி வித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த வருடம் மார்ச் மாதம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற் கான அனைத்து நடவடிக்கை களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு மேல் பரீட்சையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை.

திட்டமிட்டபடி குறித்த பரீட்சை மார்ச் மாதத்தில் நடத்தப்பட்டால், பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் ஜூன் மாதத்தில் வெளியிடப்படும் - என்றார்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையில், நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந் துள்ளதால் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரைப் புரட்டியெடுத்த புரெவி; 6 ஆயிரத்து 795 பேர் இடம்பெயர்வு!

புரேவி புயல் காரணமாக ஏற்பட்ட கடுமையான காற்று மற்றும் மழையால் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் 18 இடைத்தங் கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள னர் என்று மாவட்ட அரச அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்டத்தில் மேலதிகமாக அனார்த்தம் ஏற்பட்டால் முகம் கொடுக்க கூடிய நிலையில் தயாராக உள்ளோம். மன்னார் மாவட்டத்தில் 'புரெவி சூறாவளி' தாக்கத்தால் ஏற்பட்ட அதிவேக காற்று மற்றும் மழை வீழ்ச்சி தற்போது குறைவடைந்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு தொடக்கம், நேற்று வியாழக்கிழமை அதிகாலை வரை ஏற்பட்ட பலத்த காற்று மற்றும் மழை காரணமாக மன்னார் மாவட் டத்தில் 1,778 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 795 பேர் பாதிப்படைந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் மாவட்டத்தில் உள்ள 18 இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர்களின் வீடுக ளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக் கான சமைத்த உணவை அனார்த்த முகாமைத்துவ திணைக் களத்தின் ஊடாக வழங்கி வருகின்றோம்.

கடந்த புதன்கிழமை ஏற்பட்ட பலத்த காற்று மற் றும் கடல் கொந்தளிப்பால் கடல் நீர் சுமார் 40 மீற்றர் தூரம் கடற் கரையைத் தாண்டி வந்துள்ளது.

இதனால் தலைமன்னார், பேசாலை, வங்காலைப் பாடு, சிறுத்தோப்பு, பள்ளிமுனை போன்ற கிராமங்க ளில் உள்ள மீனவர்களினுடைய மீன்பிடி உபகர ணங்கள் குறிப்பாக படகுகள் சேதமாகியுள்ளன.

மீன்பிடி வலைகள் கடலினுள் அடித்துச் செல்லப்பட் டுள்ளன. அத்துடன் மீனவர்களின் கொட்டு வாடிகளும் சேதமாகியுள்ளன.

இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளுக்கு மீனவர்கள் முகம் கொடுத்துள் ளார்கள். குறித்த பாதிப்புக்கள் குறித்து அனார்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு அறிவித்துள்ளோம்.

மேலும், மன்னார் தேக்கம் அனைக் கட்டின் ஊடாக கழிவு நீர் கடலுக்குச் செல்லும் பாதையில் சுமார் 10 அடிக்கு மேல் நீர் சென்று கொண்டிருக்கின்றது. இன் னும் ஒரு அடி அதிகமாகினால் குறித்த வீதி மூட வேண் டிய நிலை ஏற்படும்.

அவ்வாறு ஏற்பட்டால் பெரியமுறிப்பு, குஞ்சுக்குளம் போன்ற கிராம மக்கள் குறித்த வீதியைப் பயண்படுத்த முடியாதநிலை ஏற்படும். பிரதேச செயலாளர்கள், அனார்த்த முகாமைத்துவப் பணி யாளர்கள், கிராம அலுவலர்கள், முப்படையினர் ஆகியோரைத் தயார் நிலையில் வைத்திருக்கின்றோம். மேலதிகமாக அனார்த் தம் ஏற்பட்டால் முகம் கொடுக்கக் கூடிய நிலையில் தயாராக உள்ளோம் - என்றார்.

# கிளைமோர் குண்டுடன் பெண் ஒருவர் கைதாம்!

குழந்தையுடன் கிளைமோர் குண்டொன்றை கொண்டு சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் பின் முன்னாள் பெண் உறுப்பினர் மற்றும் அவரது கணவர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட் டுள்ள செய்தியில், யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கி பயணித்த பஸ் ஒன்றில் வைத்தே, இவர்கள் கடந்த (புதன்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த சந்தேகநபர்கள், பையொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் இந்தக் குண்டை மறைத்து, கொண்டு சென்றுள்ளனர் எனப் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவலுக்கு அமைய, பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இந்த சுற்றி வளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் வலையமைப்பின் ஊடாகவே இந்த நபருக்குக் கிளைமோர் குண்டு வழங் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுவிற்ஸர்லாந்திலிருந்து இலங்கையில் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்படுவதாகக் கூறப்படுகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இலக்கு வைத்து, கிளைமோர் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர், வெளிநாடுகளிலிருந்து தாக்குதல் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனப் புலனாய்வுப் பிரிவு தெரிவிக்கின்றது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், வெளிநாடுகளிலிருந்து இலங்கை மீது தாக்குதல் நடத்த முயற்சிக்கப்பட்ட 15 ஆவது சந்தர்ப்பம் இதுவெனக் கூறப்படு கின்றது.

2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நெடுங்கேணி வனப் பகுதியில் இராணுவத் தாக்குதலால் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் கோபியின் சகோதரர் ஒருவர் சுவிற்ஸர்லாந்திலிருந்து, இலங்கை மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடுகிறார் எனத் தகவல் கிடைத்துள்ளதெனப் பாதுகாப்பு பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், இயக்கச்சி பகுதியிலுள்ள கோபியின் தாய் வாழும் வீட்டுக்கு முன்பாகவே வாழ்ந்து வந்துள்ளனர். இந்த சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணை களின் ஊடாக வெற்றுக் காணியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டுகள் சிலவும் மீட்கப்பட் டுள்ளன.

அத்துடன், புதைக்கப்பட்டிருந்த வெடி மருந்துகள் சிலவற்றையும் பாதுகாப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். கடந்த புதன்கிழமை கைப்பற்றப்பட்ட கிளை மோர் குண்டு, ஒரு கிலோ 850 கிராம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கைக்குண்டை கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி வைக்க திட்டமிடப்பட்டிருந்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த ஒருவரினா லேயே, இந்த கிளைமோர் குண்டு தனக்குக் கிடைத்துள்ளதாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்காக வெளிநாடொன்றிலிருந்து இவருக்குப் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எந்தவித சந்தேகமும் எழக்கூடாது என்பதற்காகவே, தனது 7 வயதான பிள்ளையையும் குறித்த பெண் தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளார் எனக் கூறப்படுகின்றது. குறித்த சந்தேகநபர்கள் யாழ்ப்பாணத்துக்கும், குண்டொன்றை கொண்டு சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் குழுவின் இலக்கு தொடர்பில் இராணுவ புலனாய்வு பிரிவு மற்றும் பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு ஆகியன விசாரணைகளை ஆரம்பித் துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ் பிடியில் இருந்து தப்பிய கொள்ளையனை மடக்கிய மக்கள்

### சாவகச்சேரிப் பகுதியில் சம்பவம்





சாவகச்சேரியின் கல்வயல், மட்டுவில் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு ஐந்து வீடுகளில் களவு போயுள் ளது. இரவு கடுமையான மழை பெய்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஐந்து வீடுகளில் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த முதியவர்களை அச் சுறுத்தி நகைகள் ஒரு தொகைப் பணம் மற்றும் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸார் கொள்ளையர்கள் நால்வரை கைது செய்துள்ளனர். கைது செய்தவர்களை பொலிஸ் நிலையம் அழைத்து சென்று கொண்டிருந்த வேளை சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு முன்னால் பொலிஸ் பிடியில் இருந்து ஒருவர் கைவிலங்கோடு தப்பித்து ஓடியுள்ளார். இந்நிலையில் சுமார் ஒரு மணித்தியாலமாக சாவகச்சேரி டச் வீதிப் பகுதிகளில் பொலிஸார் தேடுதல் நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் அப்பகுதி இளைஞர்களும் பொலிஸாரோடு இணைந்து தேடுதல் நடத்தினர். அப்போது டச் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் அந்தக் கொள்ளையன் ஓடி ஒளிந்த சமயம் இளைஞர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர். பிடிக்கப்பட்டவர் மக்களின் உதவியுடன் பொலிஸாரினால் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

## பிரபா ஒருவரைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இறுதி யுத்தத்தில் சிக்கிய ஒன்றரை லட்சம் மக்களுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை எனவும் சபையில் அவர் தெரிவித்தார்.

இவை எவையுமே இறுதி யுத்தத்தில் இடம்பெறவில்லை என்றால் அரசாங்கம் தைரியமாக சர்வதேச விசாரணைக்கு முகங்கொடுக்க வேண்டும் எனவும் அவர் சவால் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை, அரசாங்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் குழுநிலை விவாதத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

பலத்த குறுக்கீடுகளுக்கு மத்தியில் அவர் உரையாற்றினார். அவர் மேலும் கூறுகையில் –

இறுதி யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் விடுதலைப்புலிகளின் அரசியல் தலைவர்களான நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோர் என்னைத் தொடர்பு கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்த பொதுமக்களைப் பாதுகாப்பாக மீட்க நடவடிக்கை எடுக்க அவர்கள் வலியுறுத்தினர். அந்த மக்களை வெளியேற்றி, அவர்களைப் பாதுகாக்க வசதியாக ஆய்தங்களைக் கீழே வைக்கவும் தயார் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் இருந்தனர். அப்போதைய அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் 2009 மே 16 ஆம் திகதி மாலை முதல் இரவு வரை நான் பத்து தடைவைகளும் அதிகமாக இது குறித்துப் பேசினேன். பொதுமக்களை எவ்வாறு மீட்பது என்பது குறித்து பேசினோம். நானும், பஸிலும், இரண்டு ஆயர்களும் நேரில் சென்று மக்களின் வெளியேற்றத்தைக் கண்காணிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டில் அச்சமயம் இல்லை. அடுத்த நாள் அவர் நாடு திரும்பியதும் பாதுகாப்பு குழு கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என எனக்குக் கூறப்பட்டது.

ஆனால், பின்னர், விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த சகல பொது மக்களையும் மீட்டுள்ளதாகவும், புலிகளின் கட்டுப்பாட்டில் எந்தவொரு பொதுமகனும் இல்லை, அனைவரையும் மீட்டுள்ளோம் எனவும் தொலைக்கட்சியில் அறிவிப்பு விடப்பட்டது. அதனை கேட்டு நான் அச்சப்பட்டேன், ஏனெனில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட போதே நான்கு இலட்சத்து இருபதாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் இருந்தனர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அரச தரப்பின் கணக்கெடுப்பு, அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளின் கணக்கெடுப்பு என அனைவரதும் எண்ணிக்கைக்கு அமைய அதிகளவில் மக்கள் இருந்திருக்க வேண்டும்.

அவ்வாறு இருக்கையில், பொதுமக்களை எப்படியேனும் வெளியேற்றிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் எனது தொடர்புகளைப் பயன்படுத்தி, நாடாளுமன்ற உறுப்புரிமையை பயன்படுத்தி அரச தரப்புடன் பேசி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தேன். ஆனால் அது நடக்கவில்லை.

– இப்படி அவர் உரையாற்றிக்கொண்டிருந்த வேளையில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய அமைச்சர் சரத் வீரகேசர நீங்கள் சபையை தவறாக வழிநடத்துகின்றீர்கள். மூன்று இலட்சம் மக்களை பிரபாகரன் மனித கேடயமாக பயன்படுத்தினார். நாங்கள் அவர்களை காப்பாற்றினோம் என்றார்,

இதன் பின்னர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் சரத் பொன்சேகா “நாங்கள் ஒவ்வொரு தாக்குதலின் போதும் அதிகனவான பொது மக்களை பாதுகாத்தோம். நீங்கள் பொய்களை கூறி சபையை தவறாக வழிநடத்த வேண்டாம். நாம் மக்களை மீட்ட நேரங்களில் நீங்கள் அந்த பகுதிகளுக்கு வரவில்லை என்றார்.

மீண்டும் உரையாற்ற ஆரம்பித்த கஜேந்திரகுமார எம்.பி:–

போராட்டம் தொடங்கிய வேளையில் நான்கரை இலட்சம் பொதுமக்கள் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டு பகுதிக்குள் வாழ்ந்தனர். ஆனால் 70 ஆயிரம் பொது மக்களே விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்தனர் என அரசாங்கம் கூறியது. உணவு மற்றும் மருந்துகளை வெறுமனே 70 ஆயிரம் மக்களுக்கு மட் டுமே அனுப்பினார்கள். இதுதான் உண்மை, மூன்றரை இலட்சம் மக்கள் பின்னர் முகாம்களுக்கு வந்தனர். ஆகவே இலக்கங்களில் – இலட்சங்களில் – அரசாங்கம் பொய்களை கூறிக்கொண்டுள்ளது. இறுதி யுத்தத்தில் சிக்கிய ஒன்றரை இலட்சம் மக்களுக்கு என்னவானது என்றே தெரியவில்லை. அந்த மக்களை அரசாங்கம் கணக்கில் எடுக்கப்படவில்லை.

54 இராணுவ அதிகாரிகளுக்கு சரவதேச நாடுகளுக்கான வீசா வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சபையில் கூறினார். ஏன் அவர்களுக்கு வீச வழங்கவில்லை என சிந்தித்துப்பாருங்கள். குறித்த 54 அதிகாரிகளும் அப்பாவிகள் என்றால் அதனை நிருபிக்க வேண்டும். ஆனால் அவர்கள் குற்றவாளிகள். அதனால்தான் இந்த நிலைமை உருவாகியுள்ளது. நீங்கள் இந்த நிலைமைகளை நினைத்து வெட்கப்பட வேண்டும்.

இப்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது, ஆனால் நாம் இந்த அமைச்சை இனவழிப்பு அமைச்சு, தமிழர்களுக்கு எதிராக அமைச்சு என்றே நினைக்கின்றோம். அமைச்சிற்கு பொறுப்பான சரத் வீரசேகர சற்று முன்னர் இந்த சபையில் ஒன்றை கூறினார். தமிழ் தேசிய கூட்டமைப்பை தடைசெய்ய வேண்டும் என்றார். இதனை நினைத்து வெட்கப்பட வேண்டும்.

அதேபோல் மஹிந்த சமரசிங்க அண்மையில் இதே சபையில் ஒன்றைக் கூறினார், பொதுமக்களை பாதுகாக்க சர்வதேச நாடுகள் வந்த வேளையில் அதனை அனுமதிக்க முடியாது என மஹிந்த ராஜபக்ஷ கூறினார் எனத் தெரிவித்தார். பிரபாகரன் தப்பித்து விடுவார் என்ற காரணத்திற்காக தமிழ் மக்களை வெளியேற்ற இடமளிக்க முடியாது என்றாராம். இது தான் போர் குற்றம். ஒரு நபரைக் கொலை செய்ய வேண்டும் என்பதற்காக பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களை கொன்றமையே போர் குற்றமாகும்.

இன்றும் நாட்டில் உள்ள பாதுகாப்பு தளங்களில் அளவுக்கு அதிகமானவை வடக்கு கிழக்கிலேயே உள்ளது. இவர்களின் எதிரிகள் தமிழர்கள் என்பதே இவர்களின் நிலைப்பாடாகும். விடுதலைப்புலிகளின் பெயரை கூறி தமிழர்களை இன அழிப்பு செய்துள்ளீர்கள். தமிழர்களின் அடையாளத்தை அழிக்கும் நடவடிக்கையே முன்னெடுக்கப்பட்டது.

நேற்று தமிழர்கள். இன்று முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். இதுவே நாளை உங்கள் இனத்திற்கு எதிராக திரும்பும். இதனை நன்றாக மனதில் வைத்துக்கொள்ளுங்கள். அரக்கத்தனமான ஆட்சியை நடத்தும் உங்களுக்கு நான் இதனை மீண்டும் கூறிப் பதிவு செய்துகொள்கிறேன். தமிழர்களைப் பாதுகாக்கும் பொறுப்பில் அரசாங்கம் தோற்று விட்டது. இது நாட்டின் சகல வளர்ச்சிக்கும் பாதிப்பாக அமையும்.

சரத் வீரகேகர:– இவர் முழுமையாக பொய்களை கூறிகின்றார். புலம்பெயர் பணத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் இவர் பேசிக்கொண்டுள்ளார். நாம் பொதுமக்களை பாதுகாத்தோம். உலகத்தில் பொதுமக்களை மீட்ட மிகப்பெரிய நடவடிக்கையாகும். சர்வதேசமே அதனை ஏற்றுக்கொண்டது. எமது இராணுவத்திற்கு தங்கப்பதக்கம் கொடுக்க வேண்டும் எனவும், உலகிற்கே நாம் சிறந்த எடுத்துக்காட்டு எனவும் சர்வதேச நிபுணர்கள் புகழாரம் சூட்டியுள்ளனர். தமிழ் தேசிய கூட்டமைப்பும் பிரபாகரன் முன்னிலையில் வாக்குறுதி எடுத்தவர்கள். அவர்களை தடுக்க வேண்டும் என்பது சரியானது

கஜேந்திரக்குமார் எம்.பி:– நீங்கள் கூறுவதெல்லாம் உண்மை என்றால் ஏன் சர்வதேச விசாரணைக்கு தயங்குகின்றீர்கள்? நாம் இருவரும் ஒருவருக்கு ஒருவர் மோதிக்கொள்ளவதை விடவும் தைரியம் இருந்தால் சர்வதேச விசாரணைக்கு செல்லுங்கள். ஏன் அதற்கு அஞ்சுகின்றீர்கள்? – என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன:–

கஜேந்திரகுமார் எம்.பியின் உரையில் நாடாளுமன்றத்திற்கு பொருத்த மில்லாத சகல கருத்துக்களையும் நீக்க வேண்டும். இவர்கள் பிணங்களை விற்று வாழ்பவர்கள். சர்வதேச டொலர்களுக்காக இவர்கள் பேசிக்கொண்டுள்ளனர். – என்றார்.

இதனை அடுத்து சபையில் சிங்கள எம்.பிக்களிடையே கடும் விமர்சனம் ஏற்பட்டது. பின்வரிசையில் இருந்த சிங்கள உறுப்பினர்கள் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளில் கஜேந்திரகுமார் எம்.பியை விமர்சித்தனர். அவற்றுக்கு முகம் கொடுத்து பதிலடி கொடுத்தார் கஜேந்திரகுமார்பொன்னம்பலம்.

# வவுனியா மாவட்டத்தில் 424 பேர் பாதிப்பு; 57 வீடுகளுக்குச் சேதம்!





வவுனியா மாவட்டத்தில் புரேவி புயல் தாக்கம் காரணமாக 137 குடும்பங்களைச் சேர்ந்த 424 பேர் பாதிப்படைந்துள்ளனர் எனவும், 57 வீடுகளும், 3 சிறு கைத்தொழிற்சாலை நிலையங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் 15 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் 3 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேர் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் 35 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இங்கு பாதிக்கப்பட்ட 35 குடும்பங்களும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும், பொது இடங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 84 குடும்பங்களைச் சேர்ந்த 255 பேர் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் 4 வீடுகளும், 3 சிறு கைத்தொழிற்சாலைகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இங்கு பாதிக்கப்பட்டவர்களில் தாழ்நிலம் மற்றும் தற்காலிக வீடுகளில் வசித்த 81 குடும்பங்களைச் சேர்ந்த 244 பேர் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் பாதுகாப்புக்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர் மழை காரணமாக நீர்வரத்து அதிகரித்தமையால் வவுனியாவில் 117 குளங்களில் வான் பாய்கின்றது.

மேலும், ஏ – 9 வீதி, சாஸ்திரிகூழாங்குளம், உக்கிளாங்குளம், கோதாண்டார் நொச்சிக்குளம், நெடுங்கேணி போன்ற பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. ஏ – 9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முன்னால் வீழ்ந்த மரத்துடன் லொறி ஒன்று மோதியதில் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டக் கொட்டகையும் மரம் விழுந்து சேதமடைந்துள்ளது.

கோதாண்டர் நொச்சிக்குளத்தில் ஆலயம் ஒன்றில் நின்ற புளியமரம் விழுந்ததில் ஆலயம் சேதமடைந்துள்ளது. நெடுங்கேணி வைத்தியசாலையும் காற்று மற்றும் மழை காரணமாக பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அத்துடன், மழையுடனான காலநிலை காரணமாக மக்களது இயல்பு வாழ்க்கையும் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளது. (100)

## பருத்தித்துறையில் ஒருவர் கொரோனாவுக்கு இலக்கு!

### கொழும்பு சென்று வந்திருந்தவர்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், டிசெ.04

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பரிசோதனைக் கூடத்தில் நேற்று 336 மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய முடிவுகளில் கொரோனாத் தொற்று உறுதியானவர் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர். தன்னுடைய மாமியாரின் மருத்துவத் தேவைக்காக கொழும்பு சென்று திரும்பியவரே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் 14 நாள்கள் தனிமைப் படுத்தப்பட்டிருந்தார். அந்தவகையில் தனிமைப்படுத்தல் நிறைவடையும் நிலையில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டபோதே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது - என்றார்.

## தென்மராட்சியில் வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்த இளைஞர் சாவு!

தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் இளைஞர் ஒருவர் வீதி வெள்ளத் தில் வீழ்ந்து கிடந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கொடிகாமம் மத்தி நாகநாதன் வீதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.



கொடிகாமம் பொலிஸார் வீதியால் சென்ற போது நபர் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் நீரில் கிடந்தமையைக் கண்டனட். உடனடியாக அவரை மீட்ட பொலிஸார் அண்மையிலுள்ள மிருசுவில் நாவலடி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் தவசிகுளம் கொடி காமம் பகுதியைச் சேர்ந்த மாகாலிங்கம் மகேஷ் (வயது-28) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.





கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1985.10.28
மதம் - வேதம் K+K - RC
நட்சத்திரம் - ----------
செவ் - -------
பாவம் - -------
கல்வி - A/L
தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1993.01.23
மதம் - இந்து குருகுலம் K+K
நட்சத்திரம் - திருவோணம்
பாவம் - 30 1/2
சூ/செவ் - 04இல்
கல்வி - O/L
தொழில் - ---------
எதிர்பார்ப்பு - வெளிநாடு தேவை

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.12.2020 இல் வெளியிடப்பெற்றது.